# ஹிந்துச் சட்ட சீர்திருத்தம்

9218

(சுருக்கமான அறிமுகம்)

பப்ளிகேஷன்ஸ் டிவிஷன்

(1969)

# ஹிந்துச் சட்ட சீர்திருத்தம்

(சுருக்கமான அறிமுகம்)

பப்ளிகேஷன்ஸ் டிவிஷன்
செய்தி-ஒலிபரப்பு அமைச்சகம்
இந்திய சர்க்கார்

அக்ரஹாயன 1891 (டிசம்பர் 1969)
December 1969 (Agrahayana 1891)

Hindu Law Reform (Tamil)
ஹிந்துச் சட்ட சீர்திருத்தம்
விலை ரூ. 1.00.

Published by the Director, Publications Division, Patiala House, Delhi-1 and Printed at H. B. Packwel Press, Khajur Road, Delhi-5

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஹிந்துச் சட்டத் தொகுப்பின் வரலாறு ... | 1 |
| 2. | திருமணம் பற்றிய சட்டம் ... | 16 |
| 3. | வாரிசு உரிமைச் சட்டம் ... | 36 |
| 4. | மைனரும் கார்டியனும் ... | 56 |
| 5. | சுவீகாரமும் பராமரிப்பும் ... | 59 |
| 6. | சீர்திருத்தத்தின் சாரம் ... | 73 |

# 1. ஹிந்துச் சட்டத் தொகுப்பின் வரலாறு

இந்தியா சுதந்திரம் பெற்றவுடன் ஹிந்துச் சட்டங்களைச் சீர்திருத்தும் பணியில் சூடுபிடிக்கத் தொடங்கியது. புராதன சாஸ்திரங்களில் உள்ள விதிகளும், சுமார் ஒன்றரை நூற்றாண்டுகளாக நீதி மன்றங்கள் வெளியிட்ட வியாக்கியானங்களும் சேர்ந்து அமைந்த ஹிந்துச் சட்டங்களில் தீவிர மாறுதல்களைச் சேர்ப்பது அவசியம் என்று நீண்ட காலமாகவே அறிஞர்கள் கோரி வந்திருக்கின்றனர். ஆனால் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் அப்பட்டமான ஒரு சில குறைபாடுகளை நீக்கியதற்குமேல் விரிவான சீர்திருத்தம் எதையும் செய்யவில்லை. சமூகச் சிந்தனையில் ஏற்பட்ட மாறுதல்களுக்கு ஏற்ப ஹிந்துச் சட்டங்களைத் தீவிரமாக மாற்றுவது தங்கள் அலுவல் அல்ல என்பதை அவர்கள் ஒரு கொள்கையாகவே கொண்டிருந்தனர்.

முன்பு பல சகாப்தங்களாகக் காலத்துக்கு ஏற்ப மாறிவந்த ஹிந்துச் சட்டங்கள், பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் தேங்கி நின்று விட்டன. காலஞ் சென்ற பிரதம மந்திரி ஜவாஹர்லால் நேரு கூறியது போல, "ஹிந்துச் சட்டம் எக்காலத்திலும் நெகிழ்ச்சியின்றி விறைப்பாக இருந்ததில்லை; மாறுதலை ஏற்கும் விறுவிறுப்பு அம்சம் அதில் பொதிந்திருந்தது; சொல்லப்போனால் இந்த அம்சம்தான் அதற்கு வலிமை அளித்து வந்தது. இஷ்டம்போல் மாற்றக்கூடிய சட்டப் புத்தக நியதியாக அது இருக்கவில்லை. பலவிதமான சம்பிரதாயங்கள் தோன்றி வளர்வதற்கு அது ஊக்கமளித்தது.

அவை வளர்ச்சி பெற்றதும் அவற்றை அது அங்கீகரித்தது. உண்மையில், இன்றுகூட இந்தியாவில் பலப்பல விதமான ஹிந்துச் சட்டங்கள் உள்ளன. இந்த விறுவிறுப்பான தன்மைதான் பழங்காலத்தில் ஹிந்துச் சட்டத்தின் முக்கிய இலட்சணமாக இருந்தது உத்தரவு அல்லது சட்டம் இயற்றுவதன் மூலம் அது மாறுதல் அடையவில்லை; மாறுதல்கள் மெல்ல மெல்லப் புகுவதை அனுமதிப்பதன் மூலமே அது மாறுதல் பெற்றது✧ பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் ஹிந்துச் சட்டங்கள் தங்களுடைய இயல்பான விறுவிறுப்பை இழந்து தேங்கி நின்று விட்டன. அதே சமயத்தில் ஹிந்து சமூகம் மாறிக் கொண்டிருந்தது; மத்திய காலப் பண்புகளையும் இயல்புகளையும் அது கைவிட்டு விட்டு, தனிநபர் சுதந்திரத்தையும் முன்னேற்றத்தையும் முக்கிய இலட்சணங்களாகக் கொண்ட புதிய சகாப்தத்தில் பிரவேசித்தது. இதனால்தான், நாடு சுதந்திரம் பெற்றதும், ஹிந்துச் சட்டங்களைக் காலத்துக்கு ஏற்பச் சீர்திருத்துவதை ஒரு அவசரப் பணியாக அரசாங்கம் மேற்கொண்டது.

முக்கியமான சீர்திருத்தங்கள் சில இயற்றப்பட்டு, இன்றைய சமூகத்தின் தேவைகளுக்கு ஏற்ப ஹிந்துச் சட்டங்கள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. இந்தச் சீர்திருத்தங்களின் பரப்பையும் பொருளையும் சுருக்கமாக விளக்குவதற்கு இப்புத்தகம் முயல்கிறது.

## ஹிந்துச் சட்டத்தின் வரம்பு

இந்தியாவில் உள்ள ஹிந்துக்களின் வாரிசு உரிமை, பிதுரார்ஜிதம், திருமணம், மத வழக்கங்கள், மத

---

✧ஹிந்துத் திருமண மசோதா பற்றி 1955 மே 5-ந் தேதி லோக சபையில் நிகழ்த்திய உரை.

ஸ்தாபனங்கள் முதலியவை சம்பந்தமாக நீதி மன்றங்கள் பிரயோகித்த சட்டங்கள், விதிகள், சம்பிரதாயங்கள் ஆகியவை சேர்ந்தது ஹிந்துச் சட்டத் தொகுப்பு; அது ஹிந்துக்களின் சொந்த விவகாரங்கள் பற்றிய சட்டமாகக் கருதப்பட்டது. சுவீகாரம், கார்டியன் உரிமை, கடன்கள், நன்கொடைகள், பாகப் பிரிவினை, ஜீவனாம்சம், மைனர்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு என்பன போன்ற விஷயங்களிலும் ஹிந்துக்கள் இச் சட்டத் தொகுப்புக்கு உட்பட்டிருக்கின்றனர். அவ்வப் போது சட்ட சபையின் சட்டங்கள் மூலம் மாறுதல்கள் புகுத்தப்பட்ட போதிலும், இந்தத் தொகுப்பை உருவாக்கியதில் முன்னுதாரணங்களுக்கும் வழக்குகளின் வாயிலாகப் பிறந்த சட்ட நியதிகளுக்கும் முக்கிய பங்கு உண்டு.

பிறப்பினாலும், ஹிந்து மதத்தைத் தழுவுவதாலும் ஹிந்துக்களாக இருப்போர் அனைவரையும் "ஹிந்து" என்ற பதம் குறிக்கும். ஹிந்து மதத்துக்கு மாற்றப் பட்டவர்கள், ஹிந்து மதத்திலிருந்து மாறி மறுபடி ஹிந்து மதத்துக்குத் திரும்பியவர்கள் ஆகியோரும், இதன்படி, ஹிந்துக்கள்தாம். சட்டப்படி 'ஹிந்து' என்று கருதப்படுவதற்காக, வைதிக சம்பிரதாயங்கள் அல்லது வேறு எந்தக் கோட்பாட்டிலும் ஒருவர் நம்பிக்கை கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. முறையான திருமணத்தின்படி பிறக்காதவர்களும், ஹிந்துக்களைப் பெற்றோர்களாகக் கொண்டவர்களுமான குழந்தைகள் 'ஹிந்துக்கள்' என்றே கருதப்படுவர்; ஹிந்து ஒருவரால் வளர்க்கப்படும் எந்த ஒரு குழந்தையும் ஹிந்துவே. மற்றும், பௌத்தர்கள், ஜைனர்கள், சீக்கியர்கள், பிரம்ம சமாஜிகள், ஆரிய சமாஜிகள் ஆகியோரும் 'ஹிந்து' என்ற பதத்தில் அடக்கம். வீரசைவர்

அல்லது லிங்காயத்து, நம்பூதிரிப் பிராமணர் முதலிய ஹிந்து மதத்தின் எந்தப் பிரிவை அல்லது குழுக்களைச் சேர்ந்தவர்களும் ஹிந்துக்களே. ஹிந்துவாகப் பிறந்து ஹிந்துவாக வளர்க்கப்பட்ட ஒருவர், உணவு அல்லது சடங்குகள் முதலியவற்றில் வைதிக சம்பிரதாயத்தைப் பின்பற்றவில்லை என்பதற்காகவோ, அல்லது ஜாதி முறையையோ கடவுளையோ அவர் ஒப்புக்கொள்ளவில்லை என்பதற்காகவோ அவரை 'ஹிந்து' அல்ல என்று கருத முடியாது.

## பிரிட்டிஷ் ஆட்சியில்

இந்தியாவில் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி ஏற்பட்டபோது, ஹிந்துக்களுக்கும் முகம்மதியர் களுக்கும் தனியான சொந்தச் சட்டங்கள் இருந்தன. இவை மதத்தை—முறையே சாஸ்திரங்களையும் குர்ரானை யும்—ஆதாரமாகக் கொண்டவை. ஆங்கிலேயச் சட் டத்தை இந்திய மக்களிடையே கண்மூடித்தனமாகப் பிரயோகித்தால், அவர்களுடைய சமூக-பொருளாதார வாழ்வு சீர்குலைந்து விடும் என்பதைக் கம்பெனியார் உணர்ந்தனர். அதனால், 1781-ஆம் ஆண்டில், கீழ்நிலை நீதிமன்றங்களை வாரன் ஹேஸ்டிங்ஸ் ஏற்படுத்தியபோது, பிதிரார்ஜிதம், திருமணம், ஜாதி, மத வழக்கங்கள், மத ஸ்தாபனங்கள் முதலியவை சம்பந்தமாக, முகம்மதியர் களுக்குக் குர்ரான் நியதிகளையும், ஹிந்துக்களுக்குத் தர்ம சாஸ்திர நியதிகளையும் பிரயோகிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார். "1781-ஆம் வருஷ கல்கத்தா விதி" என்று இதற்குப் பெயர். பின்னர், 1802-ல் சென்னைக்கும், 1827-ல் பம்பாய்க்கும் இது விஸ்தரிக்கப் பட்டது. இவ்வாறு, ஜனங்களின் சொந்த விவகாரச் சட்டங்களைப் பாதுகாப்பதை ஓர் உறுதியான கொள்கை

யர்க் கிழக்கிந்திய கம்பெனியார் கடைப்பிடித்து வந்தனர். எனினும், சாஸ்திர நியதிகளின் படியும் கோட்பாடுகளின் பிரகாரமும் வழக்குகளைப் பைசல் செய்த போது, 'வழக்குச் சட்டம்' ஒன்றையும் நீதி மன்றங்கள் மெல்ல மெல்ல உருவாக்கின; சில விஷயங்களில் சாஸ்திர நியதிகளுக்கு மாறுபட்டதாக இந்த வழக்குச் சட்டம் அமைந்தது. சம்பிரதாயம், முன்னுதாரணங்கள் ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்ட வழக்குச் சட்டமே ஹிந்துச் சட்டத் தொகுப்பில் கணிசமான பகுதியாக உள்ளது என்றும் கூறலாம். சொந்த விவகாரச் சட்டங்களைத் தொகுப்பதற்காக முன்பு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் ஏதாவது ஒரு காரணத்தினால் வெற்றிபெறாமல் போய்விட்டன. கோடிக்கணக்கான ஜனங்களைப் பாதிக்கக் கூடிய விஷயங்களில், பொதுஜன ஆதரவு பற்றிய உத்தரவாதம் இல்லாமல் ஓர் அந்நிய சர்க்கார் சட்டம் இயற்றுவது ஆபத்தான காரியம் என்று ஒவ்வொரு சமயமும் கருதப்பட்டது. அதுவும் 1857-ஆம் வருஷப் பெருங் கலகத்துக்குப் பிறகு, மத விஷயங்களில் தலையிடாமல் இருப்பதை தங்களுடைய பெருமிதமான கொள்கையாக பிரிட்டிஷ் சர்க்கார் பின்பற்றலாயினர்.

ஆயினும், தொகுக்கப் பெறாத ஹிந்துச் சட்டங்களை நீதி மன்றங்கள் பிரயோகித்தபோது மிகுந்த சந்தேகமும் குழப்பமும் ஏற்பட்டன. சாஸ்திரங்களிலிருந்து ஹிந்துக்களுக்குரிய சட்டத்தை நிர்ணயித்துக் கொள்ளலாம் என்ற ஊகம் தவறானது என்பது சீக்கிரமே புலனாயிற்று. நடப்புச் சம்பிரதாயங்கள் சாஸ்திர நியதிகளுக்கு முரண்பட்டவையாகவும் பல சந்தர்ப்பங்களில் இருந்தன. சட்ட நியதிகள் போன்றவை என்று ஒப்புக்கொள்ளப்பட்ட சம்பிரதாயங்கள், ஜாதிக்கு ஜாதி, வகுப்புக்கு வகுப்பு, ஜில்லாவுக்கு ஜில்லா, குடும்பத்துக்குக் குடும்

பம்கூட வேறுபட்டிருந்தன. சட்டங்கள் ஒரே மாதிரியாக இல்லாமையால் மிகுந்த குழப்பம் காணப்பட்டது. ஒரு மாகாணத்தில் உள்ள ஹிந்துக்களைக் கட்டுப்படுத்திய சாஸ்திர நியதிகள் மற்றொரு மாகாணத்தில் உள்ளவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஹிந்துக்களில் பெரும்பாலானவர்களுக்கு பிரயோகிக்கப் பட்ட மிதாக்ஷரச் சட்டமுறை நான்கு கிளைகளாகப் பிரிந்தது; பிதிரார்ஜிதம், வாரிசு உரிமை, சுவீகாரம் ஆகியவை சம்பந்தமாக ஒவ்வொரு கிளைக்கும் தனித்தனிச் சட்டங்கள் உருவாயின. தாயபாக முறைப்படி வாரிசு உரிமைக்கு வேறு பிரத்தியேக நியதிகள் இருந்தன; இந்த நியதிகள் கருமாதிச் சடங்குகளை ஆதாரமாகக் கொண்டிருந்தன. வங்காளத்தில் பெரும்பாலும் இந்த முறையே அமுலில் இருந்தது. இவ்வாறு சட்டங்கள் தெளிவின்றி இருந்தமையால், முன்னுதாரணத்தின்படியோ அல்லது தங்கள் யுக்தானுசாரத்தின்படியோ நீதி மன்றங்கள் பல சந்தர்ப்பங்களில் ஹிந்துச் சட்டப் பிரச்சினைகளைப் பைசல் செய்ய வேண்டியதாயிற்று. இந்தத் தீர்ப்புகள் காரணமாகக் குழப்பம் மேலும் அதிகரித்தது.

## மாறுதலின் தேவை

காலத்திற்கேற்ப வளரக்கூடிய சட்டத் தத்துவத்தின்படி அமையாத ஒரு சட்ட முறையில் இத்தகைய குறைபாடுகள் இருப்பது இயல்பு. இவை காரணமாக மாத்திரமன்றி வேறு ஒரு காரணத்தினாலும் ஹிந்துச் சட்டங்களில் தீவிர மாறுதல் செய்வது அவசியமாகிறது. மனு, யாக்ஞவல்கியர் முதலியோர் வகுத்த நியதிகள், சாஸ்திர அதிகாரம் உள்ளவையாக, ஹிந்துக்களின் சொந்தச் சட்டங்களாக வெகுகாலமாய் அமலில் இருந்து வந்தன. பெண்களின் உரிமைகளையும் அந்தஸ்தையும்

தாழ்மைப் படுத்தியதால் இவை நவீன காலத்துக்குப் பொருத்தமற்றவையாக இருந்தன. பல நூற்றாண்டுகளுக்கு முன்பு இருந்த கிராமாந்தர சமுதாயத்திற்குப் பொருத்தமான விதத்தில், மதத்தை விசேஷமாக வலியுறுத்தி, பழங்கால ஒழுக்க நியதிகளும் சட்ட நியதிகளும் வகுக்கப்பட்டிருந்தன. பண்டையச் சமுதாயத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டிருக்கும் நவீன சமுதாயத் தேவைகளுக்கு ஏற்ப இந்த நியதிகளைச் சீர்திருத்துவது அவசியமாயிற்று.

உதாரணமாக, திருமணம் என்பது புனிதமான ஒரு மதச் சடங்கு என்றும், ஆயுள் முழுவதும் கட்டுப் படுத்தக்கூடிய பந்தம் என்றும் கருதப்பட்டதை நவீன சமூக நியதிகளுக்கு ஏற்ப மாற்ற வேண்டியிருந்தது. வேறுபல விஷயங்களிலும் புராதனமான மத, சமூகக் கருத்துக்களை ஹிந்துச் சட்டங்கள் ஆதாரமாகக் கொண்டிருந்ததால், நவீன சமூக வாழ்வின் கண்கூடான உண்மைகளுக்கு ஏற்ப அவற்றை மாற்றுவது அவசியமாயிற்று.

## பிரிட்டிஷ் காலத்திய மாறுதல்கள்

மத விஷயங்களில் தலையிடாமல் இருத்தல், பழமையைப் போற்றுதல் என்ற கொள்கையை பிரிட்டிஷ் சர்க்கார் பின்பற்றி வந்தபோதிலும் பொதுஜன அபிப்பிராயத்தின் நிர்ப்பந்தம் காரணமாக ஹிந்துச் சட்டங்களில் சில மாறுதல்களை அவ்வப்போது அவர்கள் இயற்ற வேண்டியதாயிற்று. இவற்றுள் முக்கியமான திருத்தச் சட்டங்கள் கீழே சுருக்கமாகத் தரப்படுகின்றன.

*ஹிந்து விதவை மறுமணச் சட்டம், 1856*

ஹிந்து விதவைகள் மறுமணம் செய்து கொள்வதற்குச் சட்ட ரீதியாக இருந்த தடைகளை இந்தச் சட்டம் நீக்கியது. ஒரு காரியத்தைச் செய்வதற்கு அனுமதி அளிக்கும் சட்டமே இது; ஹிந்து விதவை திருமணம் செய்து கொள்வதற்குச் சட்டரீதியாக இருந்த தடையை இது நீக்கியது.

*ஹிந்து பிதிரார்ஜித 2-வது திருத்தச் சட்டம், 1929*

காலமான ஒருவரின் மகனின் மகளும், மகளின் மகளும், சகோதரியும், சகோதரியின் மகனும் அவருடைய சொத்தைப் பிதிர்ராஜிதமாகப் பெறுவதற்கு இச் சட்டம் வழிசெய்தது. தூரத்துத் தாயாதிக்காரர்களை விட இரத்த சம்பந்தம் உள்ள பெண் வாரிசுகளுக்கு அதிக அளவு வாரிசு உரிமையை அது வழங்கியது. 1956-ல் இயற்றப்பட்ட 'ஹிந்து வாரிசு உரிமைச் சட்டம்' காரணமாக இந்தச் சட்டம் இப்போது காலாவதியாகிவிட்டது.

*ஹிந்து ஸ்திரீகளின் சொத்து உரிமை சட்டம், 1937*

சொத்து சம்பந்தமாக ஸ்திரீகளுக்கு முன்னைவிட அதிகமான சலுகைகளை இச்சட்டம் வழங்கியது. தாயாபாக முறையைச் சேர்ந்த ஒருவர் உயில் எழுதி வைக்காமல் இறந்தால் அவருடைய சொத்தில் அவருடைய மகளுக்குச் சமமான பங்கு, அவருடைய விதவைக்கும் உண்டு என்று இச்சட்டம் அனுமதித்தது.

மற்ற முறைகளைச் சேர்ந்த ஹிந்துக்கள் உயில் எழுதி வைக்காமல் இறக்கும்போது அவர்களுடைய தனிச்சொத்து சம்பந்தமாகவும் இதே மாறுதல் புகுத்

தப்பட்டது. மிதாக்ஷரச் சட்ட முறையைச் சேர்ந்த அவிபக்த குடும்பச் சொத்து சம்பந்தப்பட்டவரை, அந்தச் சொத்தில் தன்னுடைய கணவருக்கு இருந்த நல உரிமை அவருடைய விதவைக்கும் உண்டு என்று இச் சட்டம் குறிப்பிட்டது. இவ்வாறு விதவைக்குக் கிடைத்த உரிமை அவருடைய ஆயுள்வரைதான் நீடிக்கும் என்றும், அதை அவள் பிறருக்கு மாற்ற முடியாது என்றும் விதிக்கப்பட்டது. பாகப்பிரிவினை கோருவதற்கும் அவளுக்கு உரிமை அளிக்கப்பட்டது.

இந்தச் சட்டம் பற்றி இந்திய சமஷ்டிக் கோர்ட்டின் அபிப்பிராயம் நாடப்பட்டது. விவசாயச் சொத்து சம்பந்தப்பட்டவரை இச்சட்டம் மத்திய சட்டசபையின் அதிகார வரம்புக்குப் புறம்பானது என்று அந்தக் கோர்ட் அபிப்பிராயம் தெரிவித்தது. 1935-ஆம் வருஷ இந்திய அரசாங்கச் சட்டத்தின்படி, இவ்விஷயம் பற்றிச் சட்டம் இயற்றுவதற்கு மாகாணங்களுக்குத்தான் உரிமை உண்டு என்று அது குறிப்பிட்டது.

இந்தச் சட்டத்தின் விளைவாக ஒரு விதவை சம பங்காளி ஆகிவிடவில்லை. அவளுக்கு அளிக்கப்பட்ட பங்கு காரணமாக அவளுடைய காலஞ்சென்ற கணவருக்கு இருந்த நல உரிமை துண்டிக்கப்படவும் இல்லை. சட்ட பூர்வமான ஒரு விசேஷ உரிமையே விதவைக்கு வழங்கப் பட்டது, வாரிசு உரிமையாகவே கணவனின் சொத்து அவளுக்குக் கிடைத்தது; இதனால், அவளுடைய மரணத்துக்குப் பிறகு அந்தச் சொத்து அவளுடைய கணவரின் வாரிசுகளிடமே திரும்பிச் சென்றது.

ஹிந்து ஸ்திரீகளின் சொத்துரிமைச் சட்டத்திற்

துப் பதிலாக 'ஹிந்து வாரீசு உரிமைச் சட்டம்' 1956-ல் இயற்றப்பட்டது.

பால்ய விவாகத் தடைச் சட்டம், 1929

இது 'சாரதாச் சட்டம்' என்றும் அழைக்கப்படுகிறது. குறிப்பிட்ட வயதுகளுக்குக்கீழ்ப்பட்ட நபர்கள் திருமணம் செய்து கொள்வதைத் தடுப்பதற்காக இது இயற்றப்பட்டது' ஆனால் நடந்தேறிய திருமணம் எதையும் அது செல்லாததாக்கவில்லை. இந்தச் சட்டத்தின் படி, திருமணம் செய்துகொள்ளும் ஆணுக்கு 18 வயதோ அதற்கு மேலோ ஆகியிருக்க வேண்டும்; பெண்ணுக்கு 15 வயதோ அதற்கு மேலோ ஆகியிருக்க வேண்டும். விவாக வயது சம்பந்தமான இந்தச் சட்டத்தின் ஷரத்துக்களுக்கு விரோதமாகத் திருமணத்திற்கு ஏற்பாடு செய்கின்ற அல்லது திருமணத்தை நடத்துகின்ற பெற்றோரோ, மற்ற உறவினர்களோ, அல்லது வேறு நபர்களோ, அபராதம் அல்லது சிறைவாசம் அல்லது இந்த இரு தண்டனைகளுக்கும் உள்ளாக நேரிடும். இந்தியாவிலோ இந்தியாவிற்கு வெளியிலோ இருக்கும் இந்தியப் பிரஜைகள் எல்லோருக்கும் இந்தச் சட்டம் பிரயோகம் ஆகிறது.

திருமணமான ஹிந்து ஸ்திரீகளின் தனிவாச உரிமை, பராமரிப்பு உரிமைச் சட்டம், 1946

பின் கண்டவைகளுள் ஏதாவது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட காரணங்களுக்காக தனிவாச உரிமையும் பராமரிப்பு உரிமையும் கோருவதற்கு திருமணமான ஹிந்து ஸ்திரீக்கு இந்தச் சட்டம் வசதியளித்தது.

(1) அவள் காரணமாக அல்லாமல் வேறு விதத்தில் வந்த அருவருக்கத்தக்க ஒரு வியாதியினால் கண

வன் பீடிக்கப்பட்டிருந்தால்;

(2) அவனுடன் அவள் பந்தோபஸ்தாக வாழ முடியாத அளவுக்கு அவளை அவன் கொடுமைப்படுத்தியிருந்தால்;

(3) அவளை அவன் கைவிட்டு விட்டுப் போயிருந்தால்;

(4) அவன் மறுமணம் செய்துகொண்டிருந்தால்;

(5) வேறு மதத்துக்கு மாறியது காரணமாக அவன் ஹிந்துவாக இல்லாதிருந்தால்;

(6) தன் வீட்டில் அவன் ஒரு ஆசை நாயகியை வைத்துக்கொண்டிருந்தால், அல்லது வழக்கமாக ஒரு ஆசைநாயகியுடன் வசித்துவந்தால்;

(7) வேறு ஏதாவது நியாயமான காரணத்துக்காக.

ஜீவனாம்சம் அல்லது பராமரிப்புக்காக மனைவிக்கு எவ்வளவு கொடுக்கவேண்டும் என்பதை, கணவரின் வருமானத்தையும் அந்தஸ்தையும் பொறுத்து, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நீதி மன்றம் நிர்ணயித்து உத்தரவிடவேண்டியிருந்தது. இந்தச் சட்டத்திற்குப் பதிலாக 1956-ல் 'ஹிந்து சுவீகார, மற்றும் பராமரிப்புச் சட்டம்,' இயற்றப்பட்டது.

இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்னல் இயற்றப்பட்ட முக்கியமான சில சட்டங்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த மாறுதல்களால் புராதன சட்டத்தின் அடிப்படை பாதிக்கப்படவில்லை. ஆனல், ஏற்கனவே குறிப்பிட்டபடி, சட்டத்தில் மிகுந்த குழப்பம்

இருந்து வந்தது; ஹிந்துச் சட்டங்களைத் தொகுக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெறலாயிற்று. மத்திய சட்டசபையிலும் வெளியிலும் எழுந்த பொதுஜனக் கோரிக்கை காரணமாக 1941-ல் ஸ்ரீ பி. என். ராவின் தலைமையில் 'ஹிந்துச் சட்டக் கமிட்டி' அமைக்கப்பட்டது. ஹிந்துச் சட்டங்களில் செய்யவேண்டிய மாறுதல்கள் பற்றி யோசனை கூறுவதும் நகல் மசோதாக்களைத் தயாரிப்பதும் இந்தக் கமிட்டியின் அலுவல்கள். கமிட்டி ஒரு யாதாஸ்தையும் இரண்டு நகல் மசோதாக்களையும் தயாரித்தது. ராவ் கமிட்டி மறுபடி செயலாற்றுவதற்கு வழிசெய்யும் தீர்மானம் ஒன்று 1944-ல் மத்திய சட்ட சபையில் நிறைவேற்றப்பட்டது. விரிவான ஒரு சட்டத் தொகுப்பைத் தயாரிக்கும்படி இக் கமிட்டியிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

## விடுதலைக்குப் பின்

நாடு விடுதலை பெற்றபின் ஹிந்துச் சட்டங்களைத் தொகுக்க வேண்டும் என்ற எண்ணம் தீவிரமடைந்தது. இச்சட்டங்களைச் சீர்திருத்தும் பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் முன் வந்தனர். 1948-ல் இந்திய அரசியல் நிர்ணய சபையின் சட்டமன்றக் கூட்டத்தில் 'ஹிந்துச் சட்டத் தொகுப்பு மசோதா, பிரேரேபிக்கப்பட்டு தனிக் கமிட்டியின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது. ஆனால் இந்திய யூனியனுக்கு ஓர் அரசியல் சட்டத்தை வகுக்கும் வரையில் அதை ஒத்திவைப்பது என்று பின்னர் தீர்மானிக்கப்பட்டது. 1950-ல் இந்திய அரசியல் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டது. முன்பு சமஸ்தானங்களில் வாழ்ந்து வந்த ஜனங்களும் அப்போது இந்திய யூனியனின் பிரஜைகளாகி விட்டனர்.

வாரிசு உரிமை, பிதிரார்ஜிதம், திருமணம் முதலியவை சம்பந்தமான ஹிந்துச் சட்ட விஷயங்களை 'பொது அதிகார ஜாபிதா'வில் அரசியல் சட்டம் சேர்த்தது. அதாவது, ராஜ்ய சட்ட மன்றங்களுடன் மத்திய பார்லிமெண்டும் இவைபற்றிச் சட்டம் இயற்றுவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது; சர்ச்சை ஏற்படும் சந்தர்ப்பங்களில் ராஜ்ய சட்டங்களுக்குப் பதில் மத்திய சட்டமே செல்லுபடியாகும். இவ்வாறு மத்திய அரசாங்கத்துக்கு அதிகாரம் வழங்கியதன் காரணமாகச் சீர்திருத்தத்துக்குச் சட்டரீதியாக முன்பு இருந்துவந்த தடைகள் நீங்கின; ஹிந்துச் சட்டத்தைச் சீர்திருத்துவதற்கு இதன் மூலம் வழி அமைக்கப்பட்டது. எனினும் வேறு சில சிறு சங்கடங்கள் காரணமாகச் சீர்திருத்த வேலையில் தாமதம் ஏற்பட்டது. சுமார் இருபது முப்பது கோடிப் பிரஜைகளின் குடும்ப உறவுகளையும், விவகாரங்களையும் பெரிதும் பாதிக்கக்கூடிய தீவிர மாறுதல்களை மக்களின் அனுமதி இல்லாமல் மேற்கொள்ளக் கூடாது என்று ஒரு சாரார் சிலகாலம் வாதாடினர். அப்போதைய யூனியன் சட்ட மன்றம் வயது வந்தோர் வோட்டுரிமையின்படி நேரடியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கவில்லை. 1952-ல் பார்லிமெண்டுக்கும் ராஜ்ய சட்ட சபைகளுக்கும் வயது வந்தோர் வோட்டுரிமையின் படி பொதுத் தேர்தல் நடந்து முடிந்தபின் இந்தக் கடைசித் தடையும் நீங்கியது.

1955-மே 5-ந் தேதி லோக சபையில் புதிய ஹிந்துத் திருமண மசோதா பற்றி ஸ்ரீ ஜவாஹர்லால் நேரு சொன்னார்: 'சொந்த உறவுமுறைகள் பற்றிய ஹிந்து சட்டத்தைச் சீர்திருத்த வேண்டும் என்ற இந்தக் குறிப்பிட்ட விஷயத்தைப்போல் பொதுஜனங்களால்

பெரிதும் கவனிக்கப்பட்ட, பெரிதும் விவாதிக்கப்பட்ட விஷயம் வேறு எதுவும் இல்லை. இது ஒரு முக்கியமான ஏற்பாடு ஆகையால் பொதுஜனங்கள் இவ்வளவு அதிகமாகப் பரிசீலிப்பதற்கு சந்தர்ப்பம் அளித்தது சரியான காரியம்தான்.

## புதிய சட்டங்கள்

ஹிந்துச் சட்டங்களைத் தொகுத்து நான்கு மசோதாக்களை பார்லிமெண்ட் நிறைவேற்றியது. அவை வருமாறு; ஹிந்துச் திருமணச் சட்டம்-1955; ஹிந்து வாரிசு உரிமைச் சட்டம் 1956; ஹிந்து மைனர், கார்டியன் சட்டம்—1956; ஹிந்து சுவீகார, மற்றும் பராமரிப்புச் சட்டம்-1956. இந்த மசோதாக்கள் ஹிந்துச் சட்டங்களைத் திருத்தி அவற்றில் தீவிர சீர்திருத்தங்களைப் புகுத்தின. சட்டத்தின் அந்தஸ்துடன் இருந்து வந்த விதிமுறைகள், சம்பிரதாயங்கள் ஆகியவற்றுக்குப் பதிலாக விரிவான இந்த நான்கு சட்டங்கள் தோன்றின; ஹிந்துக்களின் சொந்தச் சட்ட நியதிகள் அனைத்தும் இவற்றுள் அடங்கிவிட்டன. 'ஹிந்துச் சட்டத் தொகுப்பு' என்று சாதாரணமாக அழைக்கப்படும் இந்த நான்கு சட்டங்களும் சமூக நீதி சம்பந்தமான நவீன கருத்துக்களுக்கு ஏற்ப முந்திய சட்டங்களைத் திருத்தி அமைத்துள்ளன. வாரிசு உரிமை, திருமண உரிமைகள்—சலுகைகள் ஆகியவை சம்பந்தமாகப் புராதன ஹிந்துச் சட்டம் தாயாதிக்காரர்கள்பால் விசேஷக் கரிசனை காட்டியது. பொதுவாக ஸ்திரீகள் விலங்கத்திலும் பாரபட்சத்தினாலும் சிரமப்பட்டனர்; மதச் சடங்குகளை நடத்த அவர்களுக்குத் தகுதியில்லை என்ற ஊகமும், குடும்பத்திலும் சமூகத்திலும் அவர்களுக்குச்

சுயேச்சையான அந்தஸ்து அளிக்கப்படாமையுமே இதற்குக் காரணம். சொத்துரிமை சம்பந்தமாகவும், திருமணம் சம்பந்தமாகவும் நெடுங்காலமாக இருந்துவந்த இந்த ஏற்றத்தாழ்வைப் புதிய சட்டங்கள் ஒழித்துவிட்டன. சமூகத்தில் பெண்களுக்கு நீதியும் சம அந்தஸ்தும் அளிக்கப்பட வேண்டும் என்ற நவீன இலட்சியங்களுக்குப் பொருத்தமான விதத்தில் திருந்திய ஹிந்து சட்டத் தொகுப்பு அமைந்திருக்கிறது.

ஹிந்துச் சட்டத் தொகுப்பின் நோக்கமும், முக்கியமான புதிய ஷரத்துக்களின் கருத்துகளும் அடுத்து வரும் அத்தியாயங்களில் தரப்பட்டுள்ளன. சீர்திருத்தத்தின் தன்மையை உணர்ந்து கொள்வதற்கு வசதியாக முந்திய சட்ட ஷரத்துக்களின் சுருக்கமும் தரப்பட்டுள்ளது. இந்த நான்கு சட்டங்களும், 1961-ஆம் வருஷ வரதட்சிணைத் தடை சட்டமும் ஹிந்து சமுகத்தில் ஆரோக்கியமான மறுதலை ஏற்படுத்தி வருகின்றன.

# 2. திருமணம் பற்றிய சட்டம்

புராதன ஹிந்துச் சட்டத்தின்படி திருமணம் என்பது ஒரு புனிதமான பந்தமாக கருதப்பட்டது; ஒப்பந்தமாக அது கருதப்படவில்லை. மரணத்தைத் தவிர வேறு எதுவும் திருமண பந்தத்தை அறுக்கவோ ரத்துச் செய்யவோ முடியாது என்று கருதப்பட்டது. பெண்களைத் திருமணம் செய்து கொடுப்பது அவர்களுடைய தந்தை, மற்ற உறவினர்கள் ஆகியோரின் கடமை என்று சாஸ்திரங்கள் விதித்திருந்தன. ஒவ்வொரு ஹிந்துவும் கட்டாயம் செய்ய வேண்டிய மதச் சடங்காக, சம்ஸ்காரமாக, அது கருதப்பட்டது. மைனர்கள் சார்பில் பெற்றோர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட திருமணங்கள் செல்லுபடியாகின. ஒரு கன்னிகையை அவளுடைய தந்தையோ கார்டியனோ மாப்பிள்ளைக்குத் தானம் செய்வது என்பதே சாதாரணமாக ஹிந்து விவாகச் சடங்காகும். இந்தத் திருமணத்தைச் செல்லுபடியாக்குவதற்காகச் சில சடங்குகள் அத்தியாவசியமானவை என்று கருதப்பட்டன. அக்கினி சாட்சியாக வாக்குறுதி கொடுப்பது, மணமகனும், மணமகளும் புனித அக்னியைச் சுற்றி ஏழு அடி எடுத்து வைப்பது என்பவையே இவை. குறிப்பிட்ட ஜாதியினரின் சம்பிரதாயத்தின்படி வேறு சடங்குகளும் நடத்தப்பட்டன என்றாலும், திருமணத்தைச் செல்லுபடியாக்குவதற்கு அத்தியாவசியமானவையாக அவை கருதப்படவில்லை.

புராதன ஹிந்துச் சட்டத்தில் இருந்த பலவகைத் திருமணங்களில் இரண்டு வகைகளே கடைசியில் எஞ்

சின. பிரம்ம விவாகம் (அங்கீகாரம் பெற்றது), அசுர விவாகம் (அங்கீகாரம் அற்றது) என்பவையே அவை. பிரதிபலன் எதையும் பெறாமல் ஒரு கன்னிகையைத் தானம் செய்வது பிரம்ம விவாகம் ஆகும். அசுர விவாகத்தில் 'சுல்கம்' (பரிசப் பணம்) என்ற பிரதிபலனைப் பெற்றுக்கொண்டு பெண்ணை ஒருவருக்குத் திருமணம் செய்து கொடுத்தனர். எல்லா ஜாதிகளைச் சேர்ந்தவர்களும் இந்த இரண்டில் ஏதேனும் ஒரு வகையில் திருமணம் செய்துகொள்ளலாம். குறிப்பிட்ட திருமண வகை காரணமாகச் சட்டரீதியான வேற்றுமை ஏதும் ஏற்படவில்லை. வேறு விதமாக நிரூபணம் செய்தாலொழிய, மற்றப்படி எவ்வொரு திருமணமும் அங்கீகாரம் பெற்ற முறையில் நடந்ததாகவே கருதப்பட்டது. சம்பிரதாயம் எப்படி இருந்தபோதிலும், விதவைகளின் மறுமணத்தை ஹிந்துச் சட்டம் ஆதரிக்கவில்லை. 1856-ல் இயற்றப்பட்ட ஹிந்து விதவை மறுமணச் சட்டம்தான் முதன் முதலாக விதவா விவாகத்தைச் சட்ட சம்மதம் ஆக்கியது; அனுமதி அளிக்கும் ஒரு சட்டமாக அது இன்னமும் அமலில் இருந்து வருகிறது.

ஒருதார முறையே பொதுவாகச் சிலாகிக்கப்பட்டது என்றாலும் சட்டப்படி ஹிந்து ஆண் ஒருவர் எத்தனை தடவை வேண்டுமானாலும் கல்யாணம் செய்து கொள்வதற்கு முன்பு உரிமை இருந்தது. புராதன நீதி சாஸ்திரப்படி, ஒரு பிள்ளையை அல்லது பிள்ளைகளைப் பெறுவதற்காக ஒரு ஹிந்து திருமணம் செய்துகொள்ளத்தான் வேண்டும் என்று இருந்தது. ஒரு மனைவி மூலமாகக் குழந்தை பிறக்காவிடில், குழந்தை பெறுவதற்காக இன்னொரு மனைவியை அவர் மணந்து கொள்வதற்கோ, அல்லது வேறு ஒரு குழந்தையைச் சுவீகாரம்

எடுத்துக் கொள்வதற்கோ வசதி இருந்தது. ஆனால் ஹிந்து ஸ்திரீ ஒருத்தி தன்னுடைய கணவன் உயிரோடு இருக்கும்வரை வேறு ஒரு மனிதனை விவாகம் செய்து கொள்ள அனுமதிக்கப்படவில்லை. பரிசுத்தமான ஹிந்துச் சட்ட நியதியின் பிரகாரம், கணவனோ மனைவியோ விவாக ரத்துச் செய்துகொள்ள அனுமதி இல்லை. மத மாற்றம், ஜாதிப் பிரஷ்டம், சோரம் போதல், கைவிடுதல், மனைவியின் விபசாரம் போன்ற எந்தக் காரணத்திற்காகவும் விவாக பந்தத்தை அறுக்க முடியாது என்று கருதப்பட்டது.

ஒரே ஜாதியில் அடங்கிய பிரிவுகள் இடையே நடந்த திருமணங்கள் செல்லத்தக்கவை என்று கருதப்பட்டன. வெவ்வேறு ஜாதியினர் இடையே நடக்கும் கலப்பு மணமும் ஹிந்து சட்டத்திற்குப் புதியது அல்ல. கீழ் ஜாதி ஆணுக்கும் மேல் ஜாதிப் பெண்ணுக்கும் இடையே நடந்த திருமணம் (பிரதிலோமா) செல்லாது என்று கருதப்பட்டது. மேல் ஜாதி ஆணுக்கும் கீழ் ஜாதிப் பெண்ணுக்கும் இடையே திருமணம் (அநுலோமா) அனுமதிக்கப்பட்டது. விவாகம் சம்பந்தமாகப் பலப்பல சம்பிரதாயங்கள் உருவாயின. நிதரிசன உண்மையை ஆதாரமாகக் கொண்டு நீதி மன்றங்களும் சில நியதிகளை உருவாக்கின; "நூறு சட்ட வாசகங்கள் கூட ஒரு உண்மையை மாற்ற முடியாது." என்பது இதன் அடிப்படையாகும். இந்தச் சித்தாந்தத்தின்படி கலப்பு ஜாதித் திருமணங்கள் கூட அங்கீகரிக்கப்பட்டன. பல வகுப்புகளில் விவாக விலக்குகள் சம்பிரதாய பூர்வமாக அனுமதிக்கப்பட்டன. 1956-க்கு முன் திருமணம் சம்பந்தமாக இருந்த ஹிந்துச் சட்ட நிலைமை இதுதான்.

1856-ல் இயற்றப்பட்ட 'ஹிந்து விதவை மறு மணச் சட்டம்' தான் சட்டபூர்வமான சீர்திருத் தங்களுள் முதலாவது. இளம் விதவைகள் திருமணம் செய்து கொள்வதற்குச் சட்ட ரீதியாக இருந்த தடை களை நீக்கி மறு மணத்தை அனுமதிப்பதற்கான சட்டம் அது. 1929-ல் இயற்றப்பட்ட 'பால்ய விவாகத் தடைச் சட்டம்' அதற்கு அடுத்த முக்கியமான நடவடிக் கையாகும்; திருமணத் தம்பதிகளுக்கு வயது வரம்பு களை இது நிர்ணயிக்கிறது. 'விசேஷ விவாகச் சட்டம்' மற்றொரு சீர்திருத்தமாகும். இது 1923-ல் திருத்தப் பட்டது. பதிவாளர் (ரிஜிஸ்திரார்) முன்னிலையில் ஹிந் துக்கள் திருமணம் செய்து கொள்வதற்கு இச்சட்டம் வசதியளித்தது. (ஹிந்துக்கள் என்ற பதத்தில் பௌத் தர், ஜைனர், சீக்கியர் ஆகியோரும் அடக்கம்). 1946-ல் 'ஹிந்துத் திருமண வில்லங்க நீக்கச் சட்டம்' இயற்றப் பட்டது. ஹிந்துக்களிடையே நடக்கும் திருமணங்கள் மற்ற விதங்களில் செல்லத்தக்கவையாக இருக்கும் போது தம்பதிகள் ஒரே கோத்திரத்தை அல்லது பரி வாரத்தைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்திற்காக மாத் திரம் அத்திருமணங்கள் செல்லமாட்டா என்று கூற முடியாது என இச் சட்டம் குறிப்பிட்டது. ஒரே ஜாதி யைச் சேர்ந்த உட்பிரிவினர்களிடையே நடக்கும் திரு மணங்களின் செலாவணி சம்பந்தமாக இருந்து வந்த சில சந்தேகங்களையும் இச் சட்டம் நீக்கியது.

அநுலோமா, பிரதிலோமா (ஜாதிக்கலப்பு) திரு மணங்கள் சம்பந்தமாகச் சில சந்தேகங்கள் எழுந்தன. இத்தகைய திருமணங்கள் சில செல்லுபடியாகமாட்டா என்ற தீர்ப்பும் வழங்கப்பட்டது. 1949-ல் இயற்றப் பட்ட 'ஹிந்து திருமண செல்லுபடிச் சட்டத்'தின் மூலம் நிலைமை தெளிவாக்கப்பட்டு, இத்தகைய திருமணங்கள்

செல்லத்தக்கவையாக்கப்பட்டன. ஹிந்து, பௌத்த, ஜைன, சீக்கிய மதப்பிரிவுகளைச் சேர்ந்தவர்களிடையே நடக்கும் திருமணங்கள் சட்டபூர்வமானவை என்று இந்தச் சட்டம் தெட்டத் தெளிவாகக் குறிப்பிட்டது.

1946-ல் இயற்றப்பட்ட 'திருமணமான ஹிந்து மாதர்களின் தனிவாச உரிமை, பராமரிப்பு உரிமை பற்றிய சட்டம், மற்றொரு முக்கியமான நடவடிக்கையாகும். குறிப்பிட்ட காரணம் அல்லது காரணங்களுக்காகத் தனியாகப் பிரிந்து வசிக்கவும் பராமரிப்புச் செலவைப் பெறுவதற்கும் திருமணமான ஹிந்து ஸ்திரீக்கு உரிமை உண்டு என்று அது முதன் முதலாக அறிவித்தது.

திருமணம் பற்றிய ஹிந்துச் சட்டத்தை நீதி மன்றங்கள் வியாக்கியானம் செய்தபோது, ஆங்கிலேயச் சட்டத்தை பின்பற்றி, பின்கண்ட இரு விதிகளை உருவாக்கின; (1) விவாக உரிமைகளைத் திரும்பப் பெறுதல்; (2) கணவனின் மரணம் அல்லது மதமாற்றம், அல்லது கைவிடுதல், அல்லது புறக்கணிப்பு காரணமாக, திருமணமான ஹிந்து ஸ்திரி பராமரிப்புச் செலவு பெறுவதற்கான உரிமை. சேர்ந்து இருப்பதற்கு கணவனும் மனைவியும் உரிமை பெற்றவர்கள் என்பதும், இதற்காக அவர்கள் சேர்ந்து வசிக்க வேண்டும் என்பதும், திருமண உரிமைகளைத் திரும்பப் பெறுவது பற்றிய கோட்பாட்டின் அடிப்படையாகும், கைவிடப்பட்ட, அல்லது சேர்ந்து வாழாமல் புறக்கணிக்கப்பட்ட தம்பதிகளில் கணவனோ மனைவியோ யார் வேண்டுமானாலும் திருமண உரிமைகளைத் திரும்பப் பெறுவதறகாக நீதி மன்றத்தின் உதவியை நாடலாம். கணவனின் சொத்து அல்லது வருமானத்திலிருந்து பராமரிப்பு பெறுவதற்கு மனைவி

அல்லது விதவை மனைவிக்கு உரிமை உண்டு என்பது மேற்சொன்ன உரிமையின் விளைவே ஆகும்; சாஸ்திரங் களிலும் இதற்கு ஆதாரம் உண்டு.

## திருமணச் சட்டச் சீர்திருத்தம்

1955-ல் இயற்றப்பட்ட 'ஹிந்துத் திருமணச் சட்டம்தான்' ஹிந்துச் சட்டத்தொகுப்பு சம்பந்தமான முதலாவது நடவடிக்கை. இதன் வாயிலாக ஹிந்துக்களின் எல்லாவகைத் திருமணச் சட்டங்களும் முழுமையான ஒரே சட்டத்திற்குள் அடக்கப்பட்டுள்ளன. பழைய சட்டங்களைச் சீர்திருத்துகின்ற பல ஷரத்துக்களும் அதில் சேர்க்கப்பட்டுள்ளன. திருமணச் சட்ட நியதிகளை அது எளிமைப் படுத்தி, செல்லத்தக்க திருமணத்திற்குரிய நிபந்தனைகளை எளிய முறையில் தொகுத்துக் குறிப்பிட்டிருக்கிறது. ஒருவர் ஒருத்தியையே மணக்கலாம் என்று அது விதிக்கிறது. இருதார மணத்திற்கு அது தெட்டத் தெளிவாகத் தடை விதித்திருக்கிறது. விவாக விலக்குப் பெறுவதற்காகச் சில சந்தர்ப்பங்களில் தம்பதிகள் சட்டபூர்வமாகப் பிரிந்து இருக்கவும், சட்டபூர்வமாக விவாகத்தை ரத்து செய்துகொள்வதற்கும் இந்தச் சட்டம் வசதி அளிக்கிறது. திருமணம், திருமணவிலக்கு சம்பந்தமாக எல்லா ஹிந்துக்களுக்கும் ஒரே விதமான நியதியை இச் சட்டம் நிர்ணயித்திருக்கிறது, சிலவகை உறவினர்களிடையே திருமணம் நடப்பதற்குத் தடை விதிக்கின்ற சம்பிரதாயங்களும் வழமுறைகளும் நீடிப்பதற்கும் இச்சட்டம் வழிசெய்கிறது.

## சட்டத்தின் முக்கிய அம்சங்கள்

1955-ஆம் வருஷ ஹிந்துத் திருமணச் சட்டம் புகுத்தியுள்ள மாறுதல்கள் வருமாறு:

(1) திருமணத்துக்கு ஒவ்வாத உறவுமுறைகள் சம்பந்தப்பட்டவரை, ஹிந்து மதத்தின் இரு பிரிவுகளுக்கும்—மிதாக்ஷர, தாயபாக பிரிவுகள் ஒரே விதமான விதிமுறையை இச்சட்டம் நிர்ணயித்திருக்கிறது.

(2) ஹிந்துக்கள், பௌத்தர்கள், சீக்கியர்கள் ஆகியோர் இடையே திருமணம் நடப்பதற்கும், ஹிந்து மதத்தைப் பின்பற்றும் எல்லா ஜாதிகள் இடையேயும் கலப்பு மணம் நடப்பதற்கும் அது திட்டவட்டமாக அனுமதி அளிக்கிறது.

(3) முந்திய திருமண உறவு நீடிக்கும்போது நபர்கள் மறுமணம் செய்துகொள்வதை அது தடுக்கிறது; இதன் மூலம் ஒரு தார மணமே சட்ட சம்மதமாக்கப்பட்டிருக்கிறது. மற்றும், இந்திய பீனல் சட்டப்படியும் இருதார மணம் புரிவோருக்குத் தண்டனை விதிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

(4) திருமணத்துக் குறைந்த பட்ச வயதை அது நிர்ணயித்திருக்கிறது—அதாவது ஆணுக்கு 18 வயது, பெண்ணுக்கு 15 வயது.

(5) திருமணம் எந்த விதத்தில் நடக்க வேண்டுமென்றோ, அல்லது அதற்காக எந்தச் சடங்கு நடத்தப்பட வேண்டும் என்றோ இச் சட்டம் நிர்ணயிக்கவில்லை.

(6) திருமண உரிமைகளைத் திரும்பப் பெறுவதற்கும், அது வழி செய்கிறது.

(7) ஹிந்துத் திருமணங்களைப் பதிவு (ரிஜிஸ்தர்) செய்து கொள்வதற்கு அது வசதி செய்திருக்கிறது. இதன்படி சிவில் திருமணம் ஹிந்துச் சட்டப்படி உள்ள திருமண வகைகளுள் ஒன்றாக அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது.

(8) சில சந்தர்ப்பங்களில் திருமண விலக்குச் செய்து கொள்ளவும், சட்டபூர்வமாகத் திருமண விலக்குப் பெற்றபின் மறுமணம் செய்து கொள்வதற்கும் அது வழி செய்கிறது.

ஹிந்துத் திருமணச் சட்டம் 1955, மே 18-ந் தேதி அமலுக்கு வந்தது; ஜம்மு-காஷ்மீர் நீங்கலாக இந்தியா முழுவதிலும் அது செலாவணியில் இருக்கிறது. ஷெடியூல் பழங்குடிகள் சம்பந்தப்பட்டவரை, ஒரு குறிப்பிட்ட பழங்குடிப் பிரதேசத்துக்கோ அல்லது பழங்குடிக்கோ இச்சட்டத்தைப் பிரயோகிக்கலாம் என்று மத்திய அரசாங்கம் உத்தரவு பிறப்பித்தால் அது செல்லுபடியாகும்.

## திருமண நிபந்தனைகள்

பின்கண்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால்தான் இரு ஹிந்துக்கள் செய்து கொள்ளும் திருமணத்தை அங்கீகரிக்கலாம்:

(1) தம்பதிகளுள் எவருக்கும் வேறு தம்பதி உயிரோடு இருக்கக்கூடாது. இதன்படி, ஹிந்துக்கள் ஒரு தார மணமே செய்து கொள்ளலாம். இந்த நிபந்தனையைப் பூர்த்தி செய்யாவிடில் புதிய திருமணம் செல்லுபடியாகாது; அதோடு, வேறு தம்பதியைக் கொண்டுள்ள நபர் மீது இந்திய பீனல் சட்டப்படி கிரிமினல் வழக்கும் தொடுக்கலாம்.

(2) திருமணம் நடக்கும் சமயத்தில் தம்பதிகளுள் எவரும் அடிமுட்டாளாகவோ பைத்தியமாகவோ இருக்கக் கூடாது. இந்த நிபந்தனையைப் பூர்த்தி செய்யாவிடில் பிரஸ்தாபத் திருமணம் செல்லுபடியாகாது.

(3) மணமகனுக்கு 18 வயதும், மணமகளுக்கு 15 வயதும் பூர்த்தியாகியிருக்க வேண்டும்.

(4) தடைசெய்யப்பட்ட உறவு முறைகளைச் சேர்ந்தவர்கள் இடையே திருமணம் நடத்தக் கூடாது. ஆனால் அத்தகைய திருமணம் நடப்பதற்குச் சம்பிரதாயம் அல்லது வழக்கம் இடம் கொடுத்தால் அவ்வாறு நடத்தலாம்.

(5) தம்பதிகள் 'ஸபிண்டக்காரர்' களாக இருக்கக் கூடாது. ஆனால் சம்பிரதாயம் அல்லது வழக்கம் அனுமதித்தால் இத்தகைய திருமணமும் நடக்கலாம்.

(6) மணப்பெண் 18 வயதுக்கு உட்பட்டவளாக இருந்தால் அவளுடைய கார்டியனின் சம்மதத்தைப் பெறவேண்டும்.

மணப்பெண் 18 வயதுக்குக் கீழ்பட்டவளாக இருந்தால் அவளுடைய தாயார், தகப்பனார், தந்தையைப் பெற்ற பாட்டி, சகோதரர்கள் முதலியோர் திருமணத்துக்குச் சம்மதம் அளிக்கலாம். தகப்பனாருக்கு அடுத்தபடியாகத் தாயாருக்கு இப்போது இந்த அதிகாரம் வழங்கப் பட்டிருக்கிறது. சட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ள உறவினரில் எவரும் இல்லாவிடில் யாருடைய சம்மதமும் தேவையில்லை.

எந்த விதத்தில் திருமணம் நடக்க வேண்டுமென்று சட்டத்தில் நிர்ணயிக்கப்படவில்லை. வழக்கமான சம்பிரதாயங்களின்படி திருமணத்தை நடத்திக் கொள்ளலாம். ஹிந்துத் திருமணங்களின் நிரூபணத்துக்காக அவற்றைப் பதிவு செய்ய வேண்டும் என்று ராஜ்ய சர்க்கார்கள் விதி இயற்றிக் கொள்ளலாம்.

## தடுக்கப்படும் உறவுகள்

ஸபிண்ட உறவும், வேறு சிலவகை உறவு முறைகளும் உள்ளவர்கள் இடையே திருமணம் நடப்பதற்குச் சட்டம் தடை விதித்திருக்கிறது. ஆணும் பெண்ணும் பின்கண்ட உறவு முறைகளைச் சேர்ந்தவர்களாக இருந்தால் திருமணம் செய்து கொள்ளக் கூடாது:

(1) தம்பதியில் ஒருவர் இன்னொருவரின் வம்ச பரம்பரை மூத்தவராக இருந்தால் (உதாரணமாக, தந்தை, தந்தையின் தந்தை, தாயின் தாய் என்பன போன்ற உறவு முறைகளில் இருந்தால்.)

(2) தம்பதியில் ஒருவர் மற்றவரின் வம்ச பரம்பரை மூத்தவருக்கோ இளையவருக்கோ மனைவியாகவோ கணவராகவோ இருந்தால்; —தந்தையின் விதவை (மாற்றுந்தாய்), மகனின் விதவை (மாட்டுப்பெண்) பிள்ளைவழிப் பேரனின் விதவை முதலிய உறவு முறைகள் இதற்கு உதாரணங்கள்.

(3) தம்பதியில் ஒருவர் சகோதரரின் மனைவியாகவோ, சிற்றப்பா அல்லது பெரியப்பாவின் மனைவியாகவோ, தாயின் சகோதரராகவோ, தாத்தாவின் சகோதரராகவோ, பாட்டியின் சகோதரராகவோ இருந்தால்;

(4) தம்பதிகள் சகோதர—சகோதரியாக இருந்தாலும், அல்லது சிற்றப்பா, பெரியப்பா—ஒன்றுவிட்ட புதல்வியாக இருந்தாலோ, சித்தி, பெரியம்மா—ஒன்றுவிட்ட பிள்ளையாக இருந்தாலோ, சகோதர – சகோதரியின் குழந்தைகளாக இருந்தாலோ, அல்லது இரு சகோதரர்களின் குழந்தைகளாக இருந்தாலோ. அல்லது இரு சகோதரிகளின் குழந்தைகளாக இருந்தாலோ,

## ஸபிண்ட உறவு

ஸபிண்டக்காரர்களிடையே திருமணம் நடப்பதற்கும் சட்டம் தடை விதித்திருக்கிறது, மிதாக்ஷர முறைப்படி ஒரு ஆணின் ஏதாவதொரு மூதாதையருடைய உடலின் அணுக்கள் ஒரு பெண்ணிடம் இருந்தால் அவள் அந்த ஆணுடன் ஸபிண்ட உறவு உள்ளவளாவாள். தம்பதியில் ஒருவர் மற்றவரின் வம்ச பரம்பரை இளையவராக இருந்தால் அவர்கள் இருவரும் ஸபிண்டக்காரர்கள் என்று 1955-ஆம் வருஷ ஹிந்துத் திருமண சட்டம் குறிப்பிடுகிறது. தாய்வழியில் மூன்றாவது முன்தலைமுறை வரையில், தந்தை வழியில் ஐந்தாவது முன்தலைமுறை வரையில் ஒருவருடைய ஸபிண்ட உறவு செல்கிறது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பிரஸ்தாப நபரிலிருந்து தொடங்கிய தலைமுறையைக் கணக்கிட வேண்டும்; அந்த நபரையும் ஒரு தலைமுறையாகக் கணக்கிட்டுக் கொள்ளலாம்.

ஒரு சம்பிரதாயம் அல்லது வழக்கம் அனுமதிப்பது காரணமாக ஸபிண்டக்காரர்களோ, விவாகத்தடை உறவுக்காரர்களோ திருமணம் செய்துகொள்வதை மேற்சொன்ன விதிமுறைகள் தடுப்பதில்லை.

இந்தச் சட்டம் அமுலுக்கு வந்தபின் நடத்தப் படும் ஒரு திருமணத்தில், சம்பந்தப்பட்ட தம்பதியில் ஒருவருக்கு ஏற்கனவே ஒரு கணவன் அல்லது மனைவி உயிரோடிருந்தால், அந்தப் புதிய திருமணம் செல்லாது. விவாகத்துக்குத் தடை விதிக்கப்பட்ட உறவு முறைகளைக் கொண்டவர்களாகவோ அல்லது ஸபிண்டக்காரர்களாகவோ அந்தத் தர்பதி இருந்தாலும் அவர்களுடைய திருமணம் செல்லாது.

இச் சட்டம் அமலுக்கு வந்ததற்கு முன்போ பின்போ நடந்த ஒரு திருமணத்தைப் பின்கண்ட காரணங்களுள் ஏதாவது ஒன்றுக்காகச் செல்லத் தகாதது என்று அறிவிக்க முடியும்; இந்தத் திருமணத்தை நீதி மன்றம் ரத்துச் செய்யலாம்:

(1) திருமணத்தின்போது பிரதிவாதி திருமண உறவுக்குக் கையாலாகாதவராக இருந்து, பிரஸ்தாப தாவா தொடுக்கப்படும்வரை அந்த நிலைமையில் அவர் நீடித்திருந்தால்;

(2) திருமண சமயத்தின்போது தம்பதியில் ஒருவர் அடிமுட்டாளாகவோ பைத்தியமாகவோ இருந்தால்;

(3) வாதியின் அல்லது வாதியின் கார்டியனுடைய சம்மதத்தை நிர்ப்பந்தமாகவோ அல்லது மோசடியாகவோ பெற்றிருந்தால். ஆனால் நிர்ப்பந்தம் நீங்கியோ, இல்லது மோசடி கண்டுபிடிக்கப்பட்டோ ஒரு வருஷத்திற்குமேல் கழிந்தபின் இத்தகைய மனுவைத் தாக்கல் செய்ய முடியாது;

மற்றும், மோசடி கண்டுபிடிக்கப்பட்ட அல்லது நிர்ப்பந்தம் நீங்கிய பிறகு தம்பதியில் எவரும் மற்றவருடன் மணமொப்பி வாழ்க்கை நடத்தியிருந்தாலும் இத்தகைய மனுவைத் தாக்கல் செய்ய முடியாது.

(4) திருமணத்தின்போது மனுதார் மூலமாக அன்றி வேறு ஒருவர் மூலம் மனைவி கருத்தரித்திருந்து அவ்விஷயம் மனுதாருக்குத் திருமண சமயத்தில் தெரியாமல் இருந்திருந்தாலும், இவ்விஷயம் கண்டுபிடிக்கப்பட்டபின் அவளுடன் அவர் இஷ்டபூர்வமாக வாழாமல் இருந்திருந்தாலும், அந்தத் திருமணத்தை ரத்துச் செய்யலாம். திருமணமாகி ஒரு வருஷம் கழிவதற்குள் இம்மனு தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று சட்டம் கூறுகிறது.

### திருமண உரிமைகள், தனிவாசம்

கணவனோ மனைவியோ நியாயமான முகாந்தரம் இல்லாமல் சேர்ந்து வாழ்வதை நிறுத்திவிட்டால், பாதகமடைந்த தம்பதியின் மனுவின் பேரில், விவாக உரிமைகளை அவர் மீண்டும் பெறுவதற்கு நீதி மன்றம் உத்தரவிடலாம். வேறு புறக் காரணங்களால் தம்பதிகள் பரஸ்பரம் பிரிந்து வாழும்போது அவர்களிடையே சமரஸம் செய்து வைப்பதற்காக இந்தப் பரிகாரம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. ஆனால் இந்த உத்தரவின்படி இரு ஆண்டுகள் அல்லது அதற்கு அதிகமான காலம் வரை நடவடிக்கை எடுக்கப்படாவிடில், இரு தம்பதிகளுள் எவருடைய வேண்டுகோள் பேரிலும் இந்தத் திருமணத்தை நீதி மன்றம் ரத்துச் செய்யலாம். கணவனோ மனைவியோ சேர்ந்து வாழ விரும்பாவிடில் விவாக

உரிமைகளை மீண்டும் வழங்குவதற்காக உத்தரவை அமல் நடத்த முடியாது.

ஒரு நீதி மன்றத்தின் உத்தரவின் பேரில் திருமணத் தம்பதி பிரிந்து வாழ்வதையே 'சட்டபூர்வமாக பிரிந்து வாழ்தல்' என்று கூறுகிறோம்' சட்டபூர்வமான பிரிவுக்கும் விவாக விலக்குக்கும் இடையே வித்தியாசம் உண்டு; சட்ட பூர்வமான பிரிவு. திருமணத்தை ரத்துச் செய்வதில்லை. தம்பதியில் ஒருவரை மற்றவருடன் சேர்ந்து வாழும் கடமையிலிருந்து மாத்திரம் அது விடுவிக்கிறது. தம்பதியில் ஒருவர் மனுச் செய்து கொள்வதன் பேரில், சட்ட பூர்வமான பிரிவை ரத்துச் செய்வதற்கு நியாய மான காரணங்கள் இருப்பதாக நீதி மன்றம் கருதினால், அவ்வாறே ரத்துச் செய்து உத்தரவு பிறப்பிக்கலாம். தற்காலிக நிவாரணம் அளிப்பதும், தம்பதி சமரஸமாகப்போவதற்கு ஒரு வாய்ப்பு அளிப்பதும்தான் இந்த ஏற்பாட்டின் நோக்கம்.

பின் கண்டவைகளுள் ஒரு காரணத்துக்காக, அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட காரணங்களுக்காக சட்ட பூர்வமான பிரிவைக் கோரி நீதிமன்றத்தில் மனுச் செய்து கொள்ளலாம்;

(1) மனுச் செய்வதற்கு முந்திய இரண்டு ஆண்டு களாகத் தொடர்ந்தாற்போல், நியாயமான காரணம் இல்லாமல் தம்பதியில் ஒருவரை இன்னொருவர் கைவிட்டிருந்தால் ;

(2) மற்றவருடன் சேர்ந்து வாழ்வது மனுதாருக்குத் தீங்கையோ ஹானியையோ விளைவிக்கும் என்று மனுதார் நியாயமாக அஞ்சும் அளவுக்கு மனுதார்

கொடுமையாக நடத்தப்பட்டிருந்தால்.

(3) மனு தாக்கல் செய்யப்படுவதற்கு முன் ஒரு வருஷத்துக்குக் குறைவில்லாத காலம் வரை பிரதிவாதி கடுமையான குஷ்டரோகத்தினால் பீடிக்கப் பட்டிருந்தால்.

(4) தொற்றிக் கொள்ளக்கூடிய மேக (வெனீரியல்) நோயினால் பிரதிவாதி பீடிக்கப்பட்டிருந்தால் அந்த வியாதி மனுதாரிடமிருந்தே அவரைப் பற்றிக் கொண்டதாக இருக்கக் கூடாது.

(5) மனு தாக்கல் செய்யப்படுவதற்கு முன் இரு ஆண்டுகளுக்குக் குறையாத காலம் வரை சேர்ந்தாற்போல் பிரதிவாதி புத்தி மாறாட்டத்துடன் இருந்து வந்தால்.

(6) - திருமணத்துக்குப் பிறகு பிரதிவாதி தன்னுடைய தம்பதியுடன் அல்லாமல் வேறு ஒருவருடன் உடல் உறவு கொண்டிருந்தால்.

சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன் திருமணம் நடந்திருந்தாலும் அல்லது பின்பு நடந்திருந்தாலும், சட்டபூர்வமான பிரிவுக்கு மனுச் செய்து கொள்ளலாம். இவ்வாறு பிரிவதை அனுமதிக்கும் உத்தரவின் மூலம் திருமணம் ரத்தாவதில்லை. தம்பதி பிரிந்து வாழ்ந்த போதிலும், முடிந்தால் தங்கள் கருத்து வேற்றுமைகளைச் சமரஸமாக தீர்த்துக் கொள்வதற்கு ஒரு சந்தர்ப்பத்தை இந்த ஏற்பாடு தருகிறது. கருத்து வேற்றுமைகளை அவ்வாறு தீர்த்துக்கொள்ள முடியாவிடில் சட்டபூர்வப் பிரிவைத் தொடர்ந்து, இரு ஆண்டுகள் கழிந்த

பின், திருமண விலக்குக்குத் தம்பதியில் எவரும் மனுச் செய்து கொள்ளலாம்.

திருமண விலக்கு நிபந்தனைகள்

திருமண விலக்குக்கு வசதி செய்திருப்பதுதான் இந்தச் சட்டத்தின் மூலம் ஹிந்துச் சட்ட முறையில் ஏற்பட்டிருக்கும் மிக முக்கியமான மாறுதல் ஆகும். முன் பெல்லாம் ஜாதி வழக்கங்கள் அல்லது சம்பிரதாயங்களை ஆதாரமாகக் கொண்டு திருமண விலக்கு உரிமை அமைந்திருந்தது. ஆனால் இந்தச் சட்டமோ எல்லா வகைத் திருமணங்கள் சம்பந்தமாகவும், சில குறிப்பிட்ட காரணங்களுக்காகத் திருமண விலக்குப் பெறுவதற்கு வழி செய்திருக்கிறது; கணவன், மனைவி இருவருக்கும் இந்த உரிமை உண்டு.

பின்கண்டவைகளுள் ஒரு காரணத்துக்காக அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட காரணங்களுக்காகத் திருமணத்தை ரத்துச் செய்யக் கோரி தம்பதியில் எவரும் மனுச் செய்து கொள்ளலாம் :—

(1) வேறு ஒருவருடன் பிரதிவாதி உடல் உறவு கொண்டு வாழ்ந்து வந்தால் ;

(2) மத மாற்றம் காரணமாகப் பிரதிவாதி ஒரு ஹிந்து வாக நீடித்து இருக்காவிடில் ;

(3) மனு தாக்கல் செய்வதற்கு முன் மூன்று வருஷ காலத்துக்குக் குறையாமல் தொடர்ந்தாற்போல் பிரதிவாதி தீராத மனநோயுடன் இருந்தால், அல்லது கடுமையான குஷ்ட ரோகத்தினால் பீடிக்கப் பட்டிருந்தால், அல்லது தொற்றிக் கொள்ளக்

கூடிய மேக நோயினால் பீடிக்கப்பட்டிருந்தால்.

(4) ஏதாவது ஒரு மதப்பிரிவைச் சேர்ந்த துறவிக் கோஷ்டியில் பிரதிவாதி சேர்ந்துகொண்டு உலக வாழ்வைத் துறந்துவிட்டால்;

(5) பிரதிவாதி உயிரோடிருப்பதாக ஏழு வருஷ காலமாக மனுதார் கேள்விப்படாமல் இருந்தால்;

(6) சட்டபூர்வமாகப் பிரிந்து வாழ உத்தரவு பிறப்பிக்கப்பட்ட இரண்டு ஆண்டுகள் அல்லது அதற்கு அதிகமான காலம்வரை பிரதிவாதி மறுபடியும் சேர்ந்து வாழாவிடில்;

(7) திருமண உரிமைகளை மீண்டும் வழங்கும் உத்தரவின்படி இரண்டு வருஷங்களோ அதற்கு அதிகமான காலமோ பிரதிவாதி நடக்காவிட்டால்.

மற்றும், தன்னுடைய கணவர் மறுபடியும் திருமணம் செய்து கொண்டிருக்கிறார் என்பதற்காகவோ, அல்லது ஏற்கனவே ஒரு தாரம் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தாரங்கள் இருக்கையில் தன்னை அவர் மணந்து கொண்டார் என்பதற்காகவோ, இச்சட்டம் வருவதற்கு முன் திருமணம் செய்து கொண்ட ஒரு மனைவி திருமண விலக்கு பெறுவதற்கு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. தான் மனுச் செய்து கொள்ளும் சமயத்தில் மற்றொரு மனைவி உயிரோடிருக்கிறாள் என்பதை மனுச் செய்யும் மனைவி நிரூபிக்க வேண்டும். தவிர, திருமணமானபின், தன் கணவன் யாரையாவது கற்பழித்ததாகவோ, வேறு ஆண்களுடன் விபரீத உறவு கொண்டதாகவோ, மிருகத்தனமாகவோ (பெஸ்டியாலிட்டி) நடந்துகொண்டதாகவோ நிரூபிக்கப்பட்டால்

அக்காரணத்துக்காகவும் திருமண விலக்குப் பெறுவதற்கு மனுச் செய்து கொள்ளலாம்.

சாதாரணமாக, திருமணம் நடந்து மூன்று வருஷங்கள் கழிந்திராவிட்டால் திருமண விலக்கு மனுவை நீதி மன்றம் ஏற்றுக்கொள்ள முடியாது. திருமணத்தை ரத்துச் செய்து நீதி மன்றம் டிகிரி வழங்கியபின் ஒரு வருஷம் கழித்து இரு கட்சியாரும் வேறு மணம் செய்து கொள்ளலாம். ஆனால் அப்பீல் உரிமை இருக்கும் போதோ, அப்பீல் காலம் கழிவதற்கு முன்போ, அல்லது திருமண ரத்துக்கு எதிரான அப்பீல் தள்ளுபடி செய்யப்படுவதற்கு முன்போ இவ்வாறு மறுமணம் செய்துகொள்ள முடியாது.

பலரும் பொதுவாக நினைக்கிறபடி 1955-ஆம் வருஷ ஹிந்துத் திருமணச் சட்டத்தில் அடங்கிய திருமண விலக்கு முறை அவ்வளவு சுலபமானது அல்ல. அதற்குப் பல நிபந்தனைகளும் வரையறைகளும் விதிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வழக்கிலும் பின்கண்ட விஷயங்களைக் கவனிப்பது நீதி மன்றத்தின் கடமையாகும்; -(1) கட்சியினர் பரஸ்பரம் ஒத்துப் பேசிக் கொண்டு வந்திருக்கவில்லை என்பதையும்; அந்தரங்க சுத்தியுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதையும் கவனிக்க வேண்டும்; (2) ஒவ்வொரு வழக்கின் தன்மையையும் சந்தர்ப்பங்களையும் பொறுத்து இரு கட்சியார் இடையேயும் சமரஸம் ஏற்

படுத்துவதற்குச் சகல முயற்சிகளும் செய்யப்பட்டுள்ளனவா என்பதைக் கவனிக்க வேண்டும்.

### ஜீவனாம்சம், பராமரிப்பு

திருமணத்தை ரத்துச் செய்வதற்கோ, சட்ட பூர்வமாய்ப் பிரிந்து வாழ்வதற்கோ தாக்கல் செய்யப்படும் மனு விசாரணையில் இருக்கும்போது, மனைவிக்கோ கணவனுக்கோ கொடுக்கப்படவேண்டிய ஜீவனாம்சத்தை நீதிமன்றம் நிர்ணயிக்கலாம். 1956-ம் வருஷ ஹிந்து வாரிசு உரிமைச் சட்டத்தின்படி ஸ்திரீகளுக்குக் கணிசமான சொத்துரிமை வழங்கப்பட்டிருப்பதால், ஜீவனாம்சம் பெறுவதற்குக் கணவன்மார்களுக்கும் உரிமை உண்டு. தவிர, சட்டப்படி நீதிமன்றம் டிகிரி வழங்கும்போதும் கணவனுக்கு மனைவியோ, மனைவிக்குக் கணவனோ பராமரிப்புக்காக ஒரு குறிப்பிட்ட தொகையைக் கொடுத்து வரவேண்டும் என்று உத்தரவிடலாம். ஆனால் அவ்வப்போது பராமரிப்புப் பணம் பெறுகின்ற தம்பதி மறுபடி திருமணம் செய்து கொள்ளாமல் இருந்தால்தான் அந்தப் பணத்தைப் பெறுவதற்கு அவருக்கு உரிமை உண்டு.

1955-ஆம் வருஷத் திருமணச் சட்டப்படி ஆணை செலுத்துகின்ற நீதிமன்றம், மைனர் குழந்தைகளின் பாதுகாப்பு, பராமரிப்பு, கல்வி ஆகியவை சம்பந்தமாக

அவ்வப்போது உத்தரவுகள் பிறப்பிக்கலாம்; விதிகளை மீறுவோருக்குத் தண்டனையும் விதிக்கலாம்.

## விசேஷத் திருமணச் சட்டம்

இந்தியாவிலுள்ள எல்லா நபர்களுக்கும் ஓரேவிதமான திருமணச் சட்டத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் ஒரு விசேஷமான திருமண முறையை 1954-ஆம் வருஷ 'விசேஷத் திருமணச் சட்டம்' ஏற்படுத்தியிருக்கிறது. இந்தச் சட்டம் ஹிந்துக்களுக்கும் பொருந்தும்: இதன் வசதிகளை அவர்களும் பயன்படுத்திக் கொள்ளலாம். இந்தச் சட்டத்தின்படி தம்பதிகளைக் கட்டுப்படுத்துகின்ற விதிகளும், குழந்தைகளின் வாரிசு உரிமை பற்றிய விதிகளும் ஹிந்துச் சட்ட விதிகளிலிருந்து பெரிதும் மாறுபட்டிருக்கின்றன; அவை 1925-ஆம் வருஷ 'இந்திய வாரிசு உரிமை சட்டத்தின் பிரகாரம் அமைந்திருக்கின்றன.

# 3. வாரிசு உரிமைச் சட்டம்

வாரிசு உரிமைப் பிரிவுதான் ஹிந்துச் சட்ட அமைப்பிலேயே மிக முக்கியமான, மிகச் சிக்கலான பிரிவு ஆகும். செல்வத்தக்க மரண சாசனம் எழுதி வைக்காமல் இறக்கின்ற ஒருவருடைய சொத்தின் வாரிசு உரிமைமையைப் பெறுவதற்கு 'இன்டெஸ்டேட் ஸக்ஸெஷன்' என்று பெயர். வாரிசு உரிமை பற்றிய பொதுவான சட்ட நியதி 1925-ஆம் வருஷ 'இந்திய வாரிசு உரிமைச் சட்ட'த்தில் அடங்கியிருக்கிறது. ஆனால், ஹிந்துக்கள், பௌத்தர்கள், ஜைனர்கள் அல்லது சீக்கியர்களின் சொத்து சம்பந்தமாக அதைப் பிரயோகிக்க முடியாது. இவர்களுடைய உயில் சாசனமற்ற சொத்தின் உரிமை சம்பந்தமாக இவர்களது சொந்தச் சட்டமே பிரயோகமாகிறது. புராதன காலத்து அசல் ஹிந்து சட்டமானது, மரண சாசனம் இல்லாமல் சொத்தை வாரிசுகள் பெறுவதைப் பற்றி மாத்திரமே குறிப்பிட்டது; உயில் அல்லது சாசனத்தின் மூலம் சொத்தை வினியோகிப்பது பற்றி அது குறிப்பிடவேயில்லை. 1956-ஆம் வருஷத்தில் 'ஹிந்து வாரிசு உரிமைச் சட்டம்' இயற்றப்படுவதற்கு முன்னால் ஹிந்து வாரிசு உரிமை சம்பந்தமாக இருந்த சட்ட நிலைமை சுருக்கமாகக் கீழே தரப்பட்டுள்ளது :

### மாதர்களும் வாரிசு உரிமையும்

ஹிந்துக்களிடையே இருந்த வாரிசு உரிமை முறைகளுள் இரண்டு பிரதானமானவை. அவை மிதாக்ஷர முறை என்றும், தாயபாக முறை என்றும் அழைக்கப்பட்டன.

வங்காளத்தில் வசித்து வந்த ஹிந்துக்களுக்குத் தாயபாக முறை பிரயோகமாயிற்று; நாட்டின் மற்றப் பகுதிகளில் வாழ்ந்த ஹிந்துக்களுக்கு மிதாக்ஷர முறையும் அதன் உட்பிரிவுகளும் பிரயோகமாயின. மற்றும் மருமக்கத்தாயம், அலியசந்தானம், நம்பூதிரி முறை என்பன போன்ற வாரிசு முறைகளும் இருந்தன. நாட்டின் தென்மேற்குக் கடற்கரைப் பகுதியைச் சேர்ந்த ஒருசில பிரிவினர்களுக்கு மாத்திரம் நம்பூதிரி முறை பிரயோகம் ஆயிற்று. மிதாக்ஷர முறையின்படி இரண்டு வழிகளில் சொத்துரிமை இறங்கியது. அவிபக்த குடும்பச் சொத்தில் உயிரோடு எஞ்சியிருப்பவருக்கு கிடைக்கும் பங்காளி உரிமை இவற்றுள் ஒன்று; சுய சம்பாத்திய சொத்துக்கள் சம்பந்தமான வாரிசு உரிமை மற்ருென்று. தாயபாக முறையில் சொத்துக்குப் பரம்பரை வாரிசு உரிமை மாத்திரமே இருந்தது; உயிரோடு எஞ்சியிருப்பவருக்குப் பங்காளி உரிமை கிடைக்கவில்லை.

மிதாக்ஷர, தாயபாக முறைகளிடையே இரண்டு அடிப்படை வித்தியாசங்கள் இருந்தன: இரத்த சம்பந்த உறவு வரிசை என்பதுதான் மிதாக்ஷர முறையின் பிரதான சித்தாந்தம். ஆனுல் தாயபாக முறையில் மதக் கிரியை செய்யும் தகுதியே வாரிசு உரிமைக்கு அடிப்படையாகக் கருதப்பட்டது.

மிதாக்ஷர முறையில் அவிபக்த குடும்பச் சொத்துக்கும், தனிச் சொத்துக்கும் வெவ்வேறு வாரிசு முறைகள் இருந்தன. ஆனுல் தாயபாக முறையில் பூர்வீகச் சொத்துக்கும் சுய சம்பாத்திய சொத்துக்கும் ஒரே மாதிரியான வாரிசு முறை பின்பற்றப்பட்டது. மிதாக்ஷர முறையில் அவிபக்த குடும்பச் சொத்துக்கு விசேஷமான சில சட்ட இலட்சணங்களும் உரிமை விகிதங்களும் இருந்தன.

அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்த ஒவ்வொரு உறுப்பினருக்கும் பிறப்பு காரணமாகப் பூர்வீகக் குடும்பச் சொத்தில் பங்காளி உரிமை இருந்தது. வாரிசு உரிமை சம்பந்தப்பட்டவரை, இறந்தவர்களின் உரிமை எஞ்சியவர்களுக்கு இறங்கியது. குடும்பம் ஒரே சொரூபமாகக் கருதப்பட்டது; அதன் ஒவ்வொரு உறுப்பினருக்கும் பிறப்பு காரணமாகப் பங்காளி உரிமை கிடைத்தது. அவிபக்த குடும்பத்தில் ஆண் உறுப்பினர் எல்லோரும்—தந்தை, பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் ஆகியோர் அவிபக்த குடும்பச் சொத்தின் கூட்டுப் பங்காளிகளாக இருந்தனர்; எல்லோரும் பொதுவாக அனுபவிப்பது, இறந்தோரின் உரிமையை எஞ்சியுள்ளவர்கள் பெறுவது என்ற நிலைமை இருந்து வந்தது. பாகப் பிரிவினைக்கு முன்னுல் அக்குடும்பத்தில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் உரிய பங்கு துல்லியமாகத் தெரியாது; மொத்தச் சொத்தில ஒரு பகுதி அவருடையது என்று மாத்திரமே கருதப்பட்டது. அவிபக்தக் குடும்பப் பங்காளிகளுள் ஒருவர் பிள்ளையின்றி இறந்தால் குடும்பச் சொத்தில் மற்றப் பங்காளிகளின் பங்கு அதிகரித்தது; புதிதாக ஓர் ஆண் குழந்தை பிறந்தால் மற்றப் பங்காளிகளின் பங்கு குறைந்தது. பெண் எவளும் கூட்டுப் பங்காளியாக முடியாது. தந்தை, பிள்ளைகள், காலஞ்சென்ற பிள்ளையின் மூன்ருவது வரிசை வரையுள்ள பிள்ளைகள் ஆகியோர் அவிபக்த குடும்பச் சொத்தின் பங்காளிகளாகக் கருதப்பட்டனர். ஒருவருடைய பிறப்பின்போது குடும்பச் சொத்தில் அவருக்கு உரிமை ஏற்பட்டது; அவிபக்த குடும்பச் சொத்து பிரிவினை செய்யப்படும்போதுதான் அவருடைய பங்கு துல்லியமாக நிர்ணயமாயிற்று.

ஸ்மிருதியின் ஒரே வாசகங்களை ஆதாரமாகக் கொண்டே மிதாக்ஷர முறையும் தாயபாக முறையும்

அமைக்கப்பட்டிருந்தன. ஆனால் மிதாக்ஷர முறையை உருவாக்கிய விஜ்னனேஸ்வரராவும், தாயபாக முறையை உருவாக்கிய ஜீமுதவாஹனனும், மனு, யாக்ஞவல்கியர் ஆகியோருடைய ஸ்மிருதி வாசகங்களுக்கு வெவ்வேறு வியாக்கியானம் கொடுத்தனர். இவ்வாறு புராதன சாஸ்திரங்களுக்கு இரு பெரும் உரையாசிரியர்கள் வெவ் வேறு பொருள் கூறியதன் விளைவாகவே மரண உரிமை சம்பந்தமாக இரண்டு ஹிந்துச் சட்ட முறைகளுக்கும் இடையே வித்தியாசம் ஏற்பட்டது. ஸ்மிருதிகளில் வரும் 'ஸபிண்ட' என்ற சமஸ்கிருதச் சொல்லுக்கு அவர் கள் இரண்டு வேறுபட்ட அர்த்தங்களைத் தெரிவித்த னர். தாயபாக முறையில், இறந்தவருக்காகப் பிண்ட மும் தண்ணீரும் கொடுப்பதற்கு ஒருவருக்கு உள்ள தகுதியே, இறந்தவருக்கு அவர் வாரிசு ஆவதற்கு ஆதார மாகக் கருதப்பட்டது. மிதாக்ஷர முறையில் ஸபிண்ட' என்ற வார்த்தைக்கு இரத்த அணு என்று, அதாவது இரத்த சம்பந்தம் என்று பொருள் கூறப்பட்டது. அதனால் மிதாக்ஷர முறையில் மதக் கிரியை சம்பந்தமான தகுதி எதுவும் குறிப்பிடவில்லை. கருமாதிச் சடங்குகளைச் செய்வதற்குத் தகுதி உள்ளவர்களா என்பதைக் கவனிக் காமல், இரத்த உறவு உள்ளவர்களா என்பதைப் பொறுத்து வாரிசுக்காரர்களின் உரிமைகள் பற்றி மிதா க்ஷரச் சட்டம் முடிவு செய்தது. எனினும், மிதாக்ஷர முறையிலும் பம்பாய்ப் பிரிவு, வாரணசிப் பிரிவு, சென் னைப் பிரிவு, மிதிலைப் பிரிவு, மயூகாப் பிரிவு எனப் பல உட்பிரிவுகள் இருந்தன. சாஸனம் எழுதாமல் இறக்கும் ஹிந்து ஆண் ஒருவரின் சொத்தின் வாரிசுகள் சம்பந்த மாக இந்த உட்பிரிவுகள் இடையே ஒரே மாதிரியான வரிசைக்கிரமம் காணப்படவில்லை.

பொதுவாக ஹிந்துச் சட்டத்தில் ஸ்திரீகளுக்கு வாரிசு உரிமை அளிக்கப்படவில்லை. ஆனால் விதவை,

புதல்வி, தாயார் முதலியோருக்கு இதிலிருந்து விதிவிலக்குகள் அளிக்கப்பட்டிருந்தன. பொதுவாக ஸ்திரீகளுக்கு வாரிசு உரிமை கிடையாது என்பதே விதியாக இருந்தது; இறந்தவரின் விதவை போன்ற ஒரு சில ஸ்திரீகளுக்குச் சொத்துரிமை அளிக்கப்பட்ட சந்தர்ப்பங்களிலும், அந்த உரிமை வரம்புக்கு உட்பட்டதாகவே இருந்தது; பிரஸ்தாப ஸ்திரீயின் மரணத்துக்குப் பின் கடைசி ஆண் உடமஸ்தரின் வாரீசுகளுக்கே அந்தச் சொத்து சென்றது. ஹிந்து ஸ்திரீகளுக்கு இருந்த வரையறைக்கு உட்பட்ட உரிமை காரணமாகப் பல சந்தர்ப்பங்களில் வியாஜ்ஜியங்கள் எழுந்து பெருத்த செலவு ஏற்பட்டுவந்தது. ஸ்திரீ ஒருத்தி புதிய பரம்பரை வாரிசாகக் கருதப்படவில்லை: ஒரு ஆணிடமிருந்து அவளுக்குக் கிடைத்த சொத்தை விக்கிரயம் செய்வது சம்பந்தமாக வரையறைக்கு உட்பட்ட அதிகாரமே அவளுக்கு இருந்தது.

எனினும், 'ஸ்திரீதனம்' என்ற ஒரு விசேஷ எஸ்டேட் ஹிந்து சட்டத்தில் உருவாற்று. ஸ்திரீதனச் சொத்து சம்பந்தமாக ஸ்திரீக்குச் சர்வ சுதந்திர பாத்தியதை இருந்தது. ஸ்திரீதனம். அதாவது ஸ்திரீயின் எஸ்டேட், என்ற கருத்து ஹிந்துச் சட்டத்துக்கு அலாதியானது; அந்தச் சொத்து கிடைத்தவிதம், மரண சமயத்தில் பிரஸ்தாப ஸ்திரீயின் அந்தஸ்து, வாரிசு உரிமைப் பிரச்சினை எழுந்தபோது இருந்த வாரிசுகள் முதலிய விஷயங்களைப் பொறுத்து, ஸ்திரீதனச் சொத்தின் வாரிசு உரிமை சம்பந்தமாகப் பலவகைப்பட்ட விதிகள் வகுக்கப்பட்டிருந்தன. ஸ்திரீதனத்தின் வாரிசுகளுடைய வரிசைக்கிரமம் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஒரே மாதிரியாக இருக்கவில்லை.

தந்தையின் மரணத்துக்கு பிறகு, பாகப் பிரிவினை செய்யப்பட்டபோது, மனைவி, தாயார், பாட்டி ஆகி

யோருக்கு ஒரு பங்கு கொடுப்பதற்கும் ஹிந்துச் சட்டத்தில் வசதி செய்யப்பட்டிருந்தது; ஆனால் இது சர்வ சுதந்திர உரிமையுடன் கூடியது அல்ல.

இந்தியாவின் தென்மேற்குக் கடற்கரைப் பகுதியில் தாய்வழிச் சொத்துரிமை முறை அமலில் இருந்தது. சென்னை சட்டசபையும், திருவாங்கூர், கொச்சி என்ற முன்னாள் சமஸ்தானங்களின் சட்டசபைகளும் இயற்றிய சட்டங்களின் பிரகாரம் இந்த முறை அனுஷ்டிக்கப்பட்டு வந்தது. பொதுவாக பெண்வழியில் வாரிசு உரிமை வருவதற்கு இச்சட்டங்கள் வழி செய்தன. ஆனால் நாட்டின் மற்றப்பாகங்களில் இருந்த முறையைப்போலல்லாமல் இந்த முறையானது ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமைகளை வழங்கியிருந்தது; பிள்ளைகளுடன் பெண்கள் சொத்தைச் சமமாகப் பங்கிட்டுக் கொள்ள வேண்டியிருந்தது எனினும், நம்பூதிரிச் சட்டப்படி, இறந்தவரின் பிள்ளை, விதவை மனைவி ஆகியோருடன் திருமணமான பெண்களுக்குச் சொத்தில் பங்கு கிடைக்கவில்லை.

## புதிய வாரிசு உரிமைச் சட்டம்

1956-ஆம் வருஷத்தில் இயற்றப்பட்ட 'ஹிந்து வாரிசு உரிமைச் சட்டம்' மிக முக்கியமான, அடிப்படையான ஒரு சீர்திருத்தமாகும். கடந்தகால விதி முறைகள், செயல்முறைகள் ஆகியவற்றிலிருந்து அதைப் பிரித்துக் காட்டுகின்ற முக்கிய கோட்பாடுகள் வருமாறு:—

(1) மரண சாஸனம் எழுதிவைக்காமல் இறப்போருடைய சொத்தின் உரிமை சம்பந்தமாக, எல்லா ஹிந்துக்களுக்கும் பெரிதும் பொதுப்படையான

ஒரு சட்ட அமைப்பை அது உருவாக்கியிருக்கிறது.

(2) புதல்விகளுக்கும் வாரிசு உரிமையை அது வழங்குகிறது; சொத்து உரிமை சம்பந்தமாக ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே இருந்த ஏற்றத் தாழ்வுகளை அது நீக்குகிறது.

(3) அந்திமக்கிரியை செய்யும் உரிமை, தாயாதி உறவு, இரத்த உறவு ஆகியவற்றைவிட, அன்பையும் அபிமானத்தையும் ஆதாரமாகக் கொண்ட வாரிசுகளின் வரிசை ஒன்றை, மரண சாஸனம் இல்லாத சொத்து சம்பந்தமாக, அது உருவாக்கியுள்ளது.

ஹிந்துச் சட்டத் தொகுப்புப் பணியில் இரண்டாவது சட்டத்தைக் குறிக்கிறது 'ஹிந்து வாரிசு உரிமைச் சட்டம்.' மரண சாஸனம் இல்லாத சொத்துக்கள் சம்பந்தமான சட்ட முறைகளை அது திருத்தித் தொகுத்திருக்கிறது. ஹிந்துக்களின் வாரிசு முறை சம்பந்தமான சட்ட நியதிகளைச் சாத்தியமானவரை எளிமைப் படுத்தவும் ஒன்றுபடுத்தவும் அது முயன்றிருக்கிறது. அதன் முக்கியமான அம்சங்கள் வருமாறு:

(1) கூட்டுப் பங்காளி உரிமையுடன் இருந்து, காலஞ்சென்ற ஒருவருடைய நல உரிமையைச் (இண்டரஸ்ட்) சிலவகை ஸ்திரீ வாரிசுகள் பெறுவதற்கு அது வசதி செய்திருக்கிறது. (6-வது பிரிவு)

(2) தாயபாகச் சட்ட முறைக்கும் மிதாக்ஷர முறைக்கும் பிரத்தியேகமாக இருந்த வாரிசு உரிமை விதிகள் ஒழிக்கப்பட்டு, காலஞ்சென்றவரின் சொத்துக்கு வாரிசு உரிமை சம்பந்தமாக ஒரே விதமான

சட்ட முறை வகுக்கப்பட்டுள்ளது (8, 15, 17-வது பிரிவுகள்).

(3) வாரிசு உரிமையாக ஒரு ஸ்திரி பெறும் சொத்துக்கு அவளே சர்வ சுதந்திர உடைமைக்காரியாக்கப் பட்டிருக்கிறாள்; 'ஸ்திரியின் எஸ்டேட்' என்று ஹிந்துச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட தனி இனம் ஒழிக்கப்பட்டுவிட்டது. இந்தச் சட்டம் நிறைவேறியதற்கு முன்பு அவள் பெற்ற சொத்துக்கள் சம்பந்தமாகவும் அவளுக்குப் பூரண உடைமை யுரிமை வழங்கப்பட்டிருக்கிறது. (14-வது பிரிவு)

(4) 'ஸ்திரீதன' சொத்து முறையும், அதன் வாரிசு உரிமை சம்பந்தமான பல்வேறு விதிகளும் ஒழிக் கப்பட்டுவிட்டன.

(5) ஆண் வாரிசுகளுக்கும் ஸ்திரீ வாரிசுகளுக்கும் சம அந்தஸ்து அளிக்கப்பட்டிருக்கிறது. (8, 15, 16, 17-வது பிரிவுகள்)

(6) வியாதி, குறைபாடு அல்லது ஊனம் காரணமாக ஒருவருடைய வாரிசு உரிமையை மறுப்பது என்ற ஹிந்துச் சட்டத்தின் அலாதி ஏற்பாடு இப்போது ஒழிக்கப்பட்டுவிட்டது. (28-வது பிரிவு).

(7) கூட்டுப் பங்காளி முறையைக் கொண்ட மிதாக்ஷரச் சொத்தில் ஹிந்து ஆண் ஒருவருக்கு உள்ள நலவுரிமையை உயில் மூலம் அவர் பைசல் செய்வ தற்குத் தெளிவான அதிகாரம் வழங்கப்பட்டிருக் கிறது. (30-வது பிரிவு).

சுய சம்பாத்தியச் சொத்தாகவோ. அல்லது மிதாக்ஷர அவிபக்த குடும்பச் சொத்தில் பங்காளி உரிமையாகவோ, அல்லது இவை இரண்டும் சேர்ந்தவையாகவோ ஹிந்து ஆண் ஒருவரின் சொத்துடைமைகள் இருக்கக்கூடும். நன்கொடைப் பொருட்கள், கல்வி அறிவாலோ, கைத்திறனாலோ, வியாபாரத்திலோ பெறும் ஆதாயங்கள், அவிபக்தக்குடும்பச் சொத்தைப் பாகம் செய்யும்போது கிடைக்கும் பங்கு முதலியவை யெல்லாம் சேர்ந்து ஒருவருடைய சொந்தச் சொத்துடைமைகளாகக் கருதப்படுகின்றன. புதிய சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வாரிசு வரிசைக் கிரமப்படி இந்தச் சொத்துக்கள் அவருடைய வாரிசுகளுக்கு இறங்குகின்றன. கூட்டுப்பங்காளி உரிமையுடன் கூடிய சொத்து சம்பந்தப்பட்டவரை. சட்டப்படி கூட்டுப்பங்காளிக்கு அந்த சொத்தில் துல்லியமான பங்கு இல்லை, அச்சொத்தில் எந்தப் பாகத்தையும் அவர் தம்முடைய விசேஷ உடைமையாகக் கொள்ளமுடியாது; ஆயினும், அந்தப் பங்காளிக்கு ஒரு பெண் வாரிசோ அல்லது பெண் வாரிசு வழியாக வந்த ஒரு ஆண் வாரிசோ, இருந்தால், அந்த வாரிசின் உரிமையை அளவிடுவதற்காகச் சொத்தில் கூட்டுப் பங்காளிக்கு உள்ள நலஉரிமையின் அளவை நிர்ணயிக்கலாம் என்று சட்டத்தில் உள்ள ஒரு விசேஷ விதி கூறுகிறது. இத்தகைய பெண் வாரிசோ அல்லது பெண் வாரிசு வழியாகப் பாத்தியதை கொண்ட ஒரு ஆண் வாரிசோ இல்லாவிட்டால், எஞ்சியுள்ள கூட்டுப்பங்காளிகளுக்கே உரிமை உண்டு என்ற விதி எவ்விதத்திலும் பாதிக்கப்படமாட்டாது. ஆனால் இத்தகைய வாரிசு ஒருவர் இருந்தால், சொத்தில் காலஞ்சென்றவருக்கு உரிய நல உரிமையின் அளவை நிர்ணயிக்க

வேண்டும் என்று ஒரு விதி கூறுகிறது. அவர் தம்முடைய மரணத்துக்கு முன்னால் பாகப் பிரிவினை கோரியிருந்தால் அவருக்கு கூட்டுப் பங்காளிச் சொத்தில் கிடைத்திருக்கக்கூடிய பங்கே இவ்வாறு நிர்ணயிக்கப் படும். அவருடைய பங்கிற்குக் கிடைக்கும் நல உரிமையை அவரது வாரிசுகள் இடையே, சட்டம் குறிப்பிடுகின்ற முறையில், பங்கிட வேண்டியிருக்கும். கூட்டுப் பங்காளிச் சொத்தில் மகளைவிட மகனின் மொத்தப் பங்கு அதிகமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை; மிதாக்ஷரச் சட்டத்தின் பிரகாரம் கூட்டுப் பங்காளிச் சொத்தில் மகனுக்குப் பிறப்பு காரணமாக உரிமை ஏற்படுவதால் இந்த நிலைமையைத் தவிர்க்க முடியாது.

ஆனால் கூட்டுப் பங்காளிச் சொத்திலிருந்து தம்முடைய பங்கை ஒருவர் பிரித்து வாங்கிக் கொண்டு சென்றபின், அவருடைய தந்தை இறந்தால் கூட்டுச் சொத்தில் மறுபடியும் பங்கு கோர முடியாது என்று சட்டம் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது. மேலே பிரஸ்தாபித்தபடி, காலஞ்சென்ற ஒரு கூட்டுப் பங்காளியின் நல உரிமையானது, இந்தச் சட்டப்படி, அவருடைய சுயார்ஜித சொத்தைப் போலவே வாரிசுகளுக்கு இறங்கும். பிறப்பு காரணமாகச் சொத்துரிமை எதுவும் ஏற்படுவதைத் தாயபாக முறை ஒப்புக் கொள்ளாமையால், காலமாகும் ஒருவருடைய சொத்தை அவருடைய வாரிசுகள் இச்சட்டத்தில் உள்ள விதிகளின் பிரகாரமே பங்கிட்டுக் கொள்ளுவர்.

முதல் தர வாரிசுகள்

ஹிந்து ஆண் ஒருவரின் வாரிசுகள் இரு வகையானவர்கள் என்று இச்சட்டத்தில் தப்சீலில் குறிப்பிட்டிருக்

கிறது. அவருடைய மகன், மகள், விதவை மனைவி, தாயார் ஆகியோர் முன்னுரிமை உள்ள அல்லது முதல் பிரிவைச் சேர்ந்த வாரிசுகள் ஆவர். அவருடைய சொத்தில் இவர்கள் எல்லோருக்கும் சம பங்கு உண்டு; அவருக்கு ஒன்றுக்குமேற்பட்ட விதவை மனைவிமார்கள் இருந்தால் அவர்கள் எல்லோருக்கும் சேர்த்து ஒரு பங்குதான் கிடைக்கும். (1955-ஆம் வருஷ ஹிந்து திருமணச் சட்டப்படி ஒரு மனைவியையே மணக்க முடியும் என்பதால், அச்சட்டம் வந்தபின் நடக்கும் திருமணங்கள் சம்பந்தப்பட்டவரை ஒன்றுக்கு மேற்பட்ட விதவைகள் ஏற்பட முடியாது).

ஆனால் ஒரு மகனோ, மகளோ தந்தைக்கு முன் காலமாகியிருக்கக் கூடும். இவ்வாறு மகன் காலமாகியிருந்தால், சொத்தில் அவருக்கு எவ்வளவு பங்கு கிடைத்திருக்குமோ, அதை அவருடைய விதவை மனைவியும், பிள்ளைகளும் பெண்களும் தங்களுக்குள் சமமாகப் பகிர்ந்து கொள்வர். இதேபோல் மகள் காலமாகியிருந்தால், சொத்தில் அவளுக்குரிய பங்கை அவளுடைய பிள்ளைகளும் பெண்களும் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளுவர்.

இந்தச் சட்டம் வருவதற்கு முன்னால் முன்னுரிமை பெற்ற வாரிசுகளாக அறுவர் குறிப்பிடப்பட்டிருந்தனர்: (1) மகன், (2) அகால மரணமடைந்த மகனின் மகன் (3) அகால மரணமடைந்த மகனின் மகனுடைய மகன் (கொள்ளுப் பேரன்), (4) காலஞ்சென்றவரின் விதவை மனைவி, (5) அகால மரணமடைந்த மகனின் மனைவி (மாட்டுப் பெண்), (6) அகால மரணமடைந்த மகனின் மகனும் அகால மரணமடைந்திருந்தால், அவருடைய விதவை (அகால மரணமடைந்த மகனின் மாட்டுப் பெண்). 1956-ஆம் வருட ஹிந்து வாரிசு உரிமைச்

சட்டப்படி இந்த ஆறு பேருடன் மேலும் ஆறு வாரிசுகள் சேர்க்கப்பட்டுள்ளனர் :—

(1) தாயார்

(2) மகள்

(3) அகால மரணமடைந்த மகளின் மகள் (பேத்தி)

(4) அகால மரணமடைந்த மகளின் மகன் (பெண்வழிப் பேரன்)

(5) அகால மரணமடைந்த மகனின் மகள் (பிள்ளைவழிப் பேத்தி)

(6) அகால மரணமடைந்த மகனின் மகனும் அகால மரணமடைந்திருந்தால், பிந்தியவரின் மகள் (பிள்ளைவழிக் கொள்ளுப் பேத்தி)

இவ்வாறு சட்டத்தின் தபசிலில் 12 வாரிசுகள் முதல் வகை வாரிசுகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பேரன் - பேத்திகளும், கொள்ளுப்பேரன் - கொள்ளுப்பேத்திகளும் பிரதிநிதித்துவ முறையில்தான் வாரிசுகளாக வருகின்றனர் என்பதை, தங்கள் பெற்றோர்கள் இல்லாத நிலைமையில்தான் அவர்கள் வாரிசுகள் ஆகின்றனர் என்பதைக் கவனத்தில் கொள்ளுவது அவசியம். அசாதாரணமான சந்தர்ப்பங்களில்தான் இந்த 12 பேரும் ஏக காலத்தில் வாரிசுகளாக வர முடியும். முதல் வகையில் குறிப்பிடப்பட்டுள்ள வாரிசுகள் எல்லோரும் ஏக காலத்தில் இந்த வாரிசு உரிமையைப் பெற வேண்டும் ; மற்ற வாரிசுகளுக்கு இந்த உரிமை கிடையாது.

முதல் வகையில் குறிப்பிடப்பட்டுள்ள வாரிசுகளுள் எவரும் இல்லாத நிலைமையில், உயில் எழுதப்படாத ஒரு சொத்துக்கு, இரண்டாவது வகையைச் சேர்ந்த நபர்கள் பின்கண்ட வரிசைக் கிரமப்படி வாரிசுகளாவர்:—

(1) தந்தை
(2) மகனின் மகளுடைய மகன், மகனின் மகளுடைய மகள், சகோதரன், சகோதரி.
(3) மகளின் மகனுடைய மகன், மகளின் மகனுடைய மகள், மகளின் மகளுடைய மகன், மகளின் மகளுடைய மகள்.
(4) சகோதரனின் மகன், சகோதரியின் மகன், சகோதரனின் மகள், சகோதரியின் மகள்,
(5) தந்தையின் தந்தை, தந்தையின் தாய்.
(6) தந்தையின் விதவை, சகோதரனின் விதவை.
(7) தந்தையின் சகோதரர், தந்தையின் சகோதரி,
(8) தாயின் தந்தை, தாயின் தாய்.
(9) தாயின் சகோதரர், தாயின் சகோதரி.

இரண்டாவது வகையில் ஒரு வரிசையில் குறிப்பிடப்பட்டுள்ள வாரிசுகள், அதை அடுத்து வரும் வரிசைகளில் உள்ள வாரிசுகளைவிட முன்னுரிமை பெற்றவர்கள்; ஒரே வரிசையில் உள்ள வாரிசுகள் சம பங்கு கொண்டவர்கள். இரண்டாவதாக, இந்த ஜாபிதாவில் சகோதரர் அல்லது சகோதரி என்று குறிப்பிடுபவர்களுள் ஒரு தாய்க்கு வெவ்வேறு கணவன்மார்கள் மூலம் பிறக்கும் சகோதர-சகோதரிகள் சேர்க்கப்படவில்லை.

*இரத்த உறவினர்கள்*

தப்சீலில் இரண்டாவது பிரிவில் உள்ள வாரிசு களுக்கு அடுத்தபடியாக இரத்த சம்பந்தமுள்ள தூர பந்துக்கள் வருகின்றனர். பிரஸ்தாபச் சட்டப்படி இத்தகைய இரத்த பந்துக்கள் பின்கண்ட வரிசைக் கிரமப் படி வாரிசு உரிமை பெறுகின்றனர் ;

(1) இரு வாரிசுகள் இருந்தால் அவர்களுள் முன் தலை முறையைச் சேர்ந்திராத, அல்லது முன் தலை முறைகளில் அதிகமாகப் பிந்திச் செல்லாத ஒருவருக்கே வாரிசு உரிமையில் முன் சலுகை உண்டு.

(2) வாரிசுகள் முன் தலைமுறையைச் சேராதவர்களாகவோ, ஒரே முன் தலைமுறையைச் சேர்ந்தவர் களாகவோ இருந்தால், அந் நிலையில், பிந்திய தலைமுறையைச் சேராதவராக அல்லது பிந்திய தலைமுறையில் அதிக அடுக்குகள் இறங்காதவராக உள்ள வாரிசு முன்சலுகை பெறுகிறார்.

(3) மேற்சொன்ன விதிகளின்படி, இருவருள் எந்த வாரிசுக்கும் முன் சலுகை இல்லை என்றால் இருவரும் சேர்ந்து வாரிசுகளாவர்.

காலஞ்சென்றவரை ஒரு தலைமுறையாகக் கொண்டு அவருக்கு முந்திய தலைமுறைகளையும் பிந்திய தலைமுறைகளையும் கணக்கிட்டு தூர பந்துக்களின் வாரிசு வரிசைக் கிரமத்தை நிர்ணயிக்க வேண்டும்.

*ஸ்திரீயின் சொத்து*

ஸ்திரீகளின் சொத்துரிமைக்கு இருந்த வரையறையை புதிய சட்டம் ஒழித்திருப்பது மிகமிக முக்கிய

மான மாறுதல் ஆகும். இதன் பலனாக ஹிந்து ஸ்திரீ ஒருத்தியின் உடைமையில் இருக்கும் சொத்தை அவள் சர்வ சுதந்திர பாத்தியதையுடன் வைத்திருக்கலாம்; வரையறைக்கு உட்பட்ட உரிமைதான் அவளுக்கு உண்டு என்று கூறி சொத்து சம்பந்தமாக அவளுக்கு இருக்கும் சர்வ சுதந்திர உரிமையை யாராலும் ஆட்சேபிக்க முடியாது. பிதிர்ராஜிதம், பாகப்பிரிவினை, நன்கொடை, விலைக்குவாங்குதல், ஆகியவகையிலோ அல்லது வேறு எந்த விதத்திலோ அவளுக்கு அச்சொத்து கிடைத்திருந்தபோதிலும், இத்தகைய சர்வ சுதந்திர பாத்தியதை உண்டு. ஆனால் ஒரு நன்கொடைச் சாஸனத்தின் மூலமோ, உயிலின் மூலமோ, வேறு சாஸனத்தின் மூலமோ, நீதி மன்றத்தின் டிக்ரி அல்லது உத்தரவின் மூலமோ, வேறு ஏதாவது தீர்ப்பின் மூலமோ, ஒரு ஹிந்து ஸ்திரீக்கு வரையறை உள்ள உரிமையுடன் வழங்கப்பட்டிருக்கும் சொத்துக்கு இதிலிருந்து விதிவிலக்கு உண்டு. ஹிந்து ஸ்திரீக்கு வாரிசுகளாக வரக்கூடியவர்களின் ஜாபிதாவைச் சட்டம் குறிப்பிட்டிருக்கிறது. ஆணின் வாரிசு ஜாபிதாவிலிருந்து இது வேறுபட்டிருக்கிறது. இச்சட்டம் வருவதற்கு முன்னால் ஒரு ஸ்திரியின் 'ஸ்திரிதன' சொத்து சம்பந்தமாகப் பிரத்தியேக விதிகள் இருந்தன.

ஹிந்து ஸ்திரீயின் வாரிசுகள்

ஒரு ஹிந்து ஸ்திரீயின் வாரிசுகளின் வரிசைக்கிரமம் வருமாறு;

(1) புதல்வர்கள், புதல்விகள், கணவர் – இவர்களுக்குச் சம பங்கு உண்டு. ஒரு மகனோ மகளோ தாய்க்குமுன் அகால மரணமடைந்திருந்தால் அந்த நபருக்குரிய பங்கு அவருடைய குழந்தைகள் (பேரக்

குழந்தைகள்) இடையே சமமாகப் பகிர்ந்து கொள்ளப் படும்.

(2) கணவரின் வாரிசுகள்.

(3) தாயும் தந்தையும்

(4) தந்தையின் வாரிசுகள்

(5) தாயின் வாரிசுகள்

இங்கும் முன்வரிசையைச் சேர்ந்த வாரிசுகளுக்குப் பிந்திய வரிசை வாரிசுகளை விட முன்னுரிமை உண்டு. ஒரு ஸ்திரீ உயில் எழுதிவைக்காமல் இறந்துபோனால், அவளுடைய சொத்து சம்பந்தப்பட்டவரை, கணவன் அல்லது தந்தை அல்லது தாய்க்கு உடைமையாக ஒரு சொத்து இருந்து உயில் எழுதாமல் அந்த உடமஸ்தர் இறந்து போயிருந்தால் எந்த வரிசைக் கிரமத்தில் வாரிசுகளுக்கு உரிமை கிடைக்குமோ அதே வரிசைக் கிரமத்தில்தான் மேலே 1-வது, 4-வது, 5-வது வரிசைகளில் குறிப்பிட்டுள்ள வாரிசுகளுக்கும் உரிமை கிடைக்கும்.

'ஸ்திரீதனம்' என்ற கருத்து ஒழிக்கப்பட்டுவிட்டது என்பது இதன் உள்ளடக்கம் ஆகும். 'ஸ்திரீதனத்'தின் வாரிசு உரிமை சம்பந்தமான விதிகளுள் சில, மேற்கண்ட வாரிசு ஜாபிதாவை வகுப்பதில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளன. ஹிந்து ஸ்திரீகளுக்குப் பிதிரார்ஜிதமாகக் கிடைக்கும் சொத்து சில சந்தர்ப்பங்களில் ஆதிக் குடும்பத்திற்கு வெளியே போய்விடாமல் தடுப்பதற்காகச் சட்டத்தின் 17-வது பிரிவில் விசேஷ விதிகள் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றின்படி இத்தகைய சொத்துக்கள் ஆதிக்குடும்பத்திற்கே திரும்பிவந்துவிடும். அதா

வது, குழந்தை அல்லது பேரக் குழந்தை உயிரோடு இல்லாத சமயத்தில் ஒரு ஹிந்து ஸ்திரி மரணமடைந்தால் அவளுக்கு அவளுடைய தந்தையிடமிருந்து கிடைத்த சொத்து அவளுடைய தந்தையின் வாரிசுகளுக்குக் கிடைக்குமே தவிர ஜீவந்தராக இருக்கக்கூடிய அவளுடைய கணவருக்குக் கிடைக்காது. இதேபோல், கணவரிடமிருந்தோ மாமனாரிடமிருந்தோ ஒரு சொத்தைப் பெற்ற ஒரு ஹிந்து ஸ்திரி, குழந்தையோ பேரக்குழந்தையோ இல்லாமல் இறந்தால், அந்தச் சொத்து அவளுடைய கணவரின் வாரிசுகளுக்கே கிடைக்கும். ஸ்தாவர சொத்து, ஜங்கம சொத்து இரண்டுக்கும் இந்த விசேஷ விதிகள் பொருந்தும்.

பொதுவான விதிகள்

மற்றும் வாரிசு உரிமை சம்பந்தமாகப் பொதுப் படையான சில விதிகளையும் சட்டம் குறிப்பிட்டிருக்கிறது. அவை வருமாறு :—

(1) மற்ற எல்லா அம்சங்களிலும் உறவு முறை ஒரே மாதிரியாக இருந்து, முழு இரத்த சம்பந்தம் உள்ளவர்களும் அரைகுறை இரத்த சம்பந்தம் உள்ளவர்களும் வாரிசுகளிடையே இருந்தால், முழு இரத்தக்கலப்பு உள்ளவர்களுக்கே முன் சலுகை உண்டு ஒரே மூதாதைக்கு ஒரே மனைவி மூலம் பிறந்த சந்ததிகள் முழு இரத்த சம்பந்தம் உள்ளவர்கள் ; ஒரே மூதாதைக்கு வெவ்வேறு மனைவிமார்கள் மூலம் பிறந்த சந்ததிகள் அரைகுறை சம்பந்தம் உள்ளவர்கள்.

(2) சாதாரணமாக, இருவரோ அல்லது இரண்டுக்கு மேற்பட்டவர்களோ ஒரு சொத்துக்கு வாரிசு

ளாகும்போது, தலைக்கு இவ்வளவு என்ற கணக்கில், கூட்டு அனுபவ உரிமையுடன், அதை எடுத்துக் கொள்வர்.

(3) உயில் எழுதாமல் ஒருவர் இறக்கும்போது கர்ப்பத்திலிருக்கும் அவருடைய குழந்தைக்கு, அவர் இறப்பதற்கு முன் அக் குழந்தை பிறந்திருந்தால் எத்தகைய வாரிசு உரிமை உண்டோ அதே உரிமை கர்ப்பத்தில் இருக்கும்போதும் உண்டு.

(4) இரண்டு நபர்கள் ஏறக்குறைய ஏககாலத்தில் இறந்தால், வேறு நிரூபணம் காட்டினாலொழிய மற்றப்படி அவர்களுள் இளையவரே பிந்தி இறந்தவராகக் கருதப்படுவார்.

வீடு, குடும்பத் தொழில்

ஒரு பிரதான வாரிசாகப் பிதிர்ராஜிதத்தில் பங்கு பெறுவதற்கு மகளுக்கு முதன் முதலாக இச்சட்டம் உரிமை அளிக்கிறது. மிதாக்ஷர அவிபக்த குடும்பக் கூட்டுப்பங்காளிச் சொத்துக்களிலும் அவளுக்கு இந்த உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. இவ்வுரிமை காரணமாக அவிபக்த குடும்பச் சொத்திலோ, அவிபக்த குடும்பத் தொழில் அல்லது வியாபாரத்திலோ அனாவசியமான சீர்குலைவு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக இச் சட்டத்தில் பின்கண்ட இரண்டு உத்தரவாதங்கள் சேர்க்கப்பட்டுள்ளன ;—

(1) குடும்ப உறுப்பினர்களே வசிக்கின்ற குடும்ப வீட்டில் தானும் வசிக்க ஒரு ஹிந்து ஸ்திரீக்கு உரிமை உண்டு. ஆயினும், சொத்தைப் பாகப்பிரிவினை செய்து தங்கள் தங்கள் பங்குகளை எடுத்துச் செல்

வதற்கு ஆண் வாரிசுகள் தீர்மானித்தாலொழிய, மற்றபடி அந்த ஸ்திரீ பாகப் பிரிவினை செய்யுமாறு கோரமுடியாது.

(2) உயில் எழுதாமல் இறக்கின்ற ஒருவருக்கு ஸ்தாவர சொத்திலோ அல்லது வேறு தொழில் – வியாபாரத்திலோ இருந்துவந்த நல உரிமையை, சட்டத்தின் தப்சிலில் 1-வது வகையில் குறிப்பிடப்பட்டுள்ள வாரிசுகளில் இருவரோ, அதற்கு மேற்பட்டவர்களோ, பெற நேரிடலாம். இத்தகைய வாரிசுகளில் ஒருவர் பிரஸ்தாபச் சொத்து அல்லது தொழில் – வர்த்தகத்தில் தமக்கு உள்ள உரிமையை விக்கிரயம் செய்ய விரும்பினால், வெளியாரைவிட மற்ற வாரிசுகளுக்கே அந்த நல உரிமையை வாங்குவதற்கு முன்னுரிமை உண்டு; குடும்பச் சொத்தோ தொழிலோ சிதறிவிடாமல் இருப்பதற்கே இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

ஒரே வகை விதிமுறைகள்

மருமக்கத்தாய, அலிய சந்தானச் சட்டங்கள் தாய்வழி வாரிசு முறையை அடிப்படையாகக் கொண்டிருந்தன. அவை சம்பந்தமாக 1956-ஆம் வருஷச் சட்டத்தில் பின்கண்ட மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன ;—

(1) தப்சிலின் 1-வது, 2-வது வகைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வாரிசுகள் எவரும் இல்லாவிட்டால், மருமக்கத்தாய, அல்லது அலிய சந்தான ஆண் ஒருவரின் சொத்து, அவருக்கு மிக நெருக்கமான உறவினருக்கு—அவர் தாயாதிக்காரராக இருந்தாலும்

சரி அல்லது வேறு உறவுக்காரராக இருந்தாலும் சரி—சேரும்.

(2) மருமக்கத்தாய அல்லது அலிய சந்தான ஸ்திரீ ஒருத்தியின் சொத்து முதலில் புதல்வர்களுக்கும் புதல்விகளுக்கும் தாயாருக்கும் சம அளவில் சேரும். மகனோ மகளோ அகால மரணமடைந்திருந்தால், உயில் எழுதாமல் இறந்த அந்தத் தாயின் சொத்தில் மகளுக்கும் மகனுக்கும் எவ்வளவு பங்கு கிடைத்திருக்குமோ, அவ்வளவு பங்கு அந்த மகன் அல்லது மகளின் குழந்தைகளுக்குச் சேரும்; இரண்டாவதாக அது தந்தை அல்லது கணவரைச் சேரும்; மூன்றாவதாகத் தாயின் வாரிசுகளைச் சேரும்; நான்காவதாகத் தந்தையின் வாரிசுகளைச் சேரும்; கடைசியாக கணவரின் வாரிசுகளைச் சேரும்.

(3) குடியிருக்கும் வீட்டைப் பாகப்பிரிவினை செய்யுமாறு கோரும் உரிமையைக் கட்டுப்படுத்துகின்ற விசேஷ ஷரத்து இந்த இரண்டு முறைகளைச் சேர்ந்தவர்களுக்குப் பிரயோகமாகாது.

மிதாக்ஷர அவிபக்த குடும்பங்களைப் போல, மருமக்கத்தாயம், அலிய சந்தானம், நம்பூதிரிச் சட்ட முறைகளில் உள்ள அவிபக்தக் குடும்பங்களுக்குத் தரவாடு, தாவழி, குடும்பம், கராரு, இல்லம் என்ற பெயர்கள் உண்டு. இந்த அவிபக்தக்குடும்ப உறுப்பினர்களில் ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் உடைமை உரிமை உண்டு. மிதாக்ஷரக் கூட்டுப்பங்காளி உரிமையைப் போலவே இந்த உடைமை உரிமையின் வாரிசு சம்பந்தமான விதிமுறைகளும் அமைந்துள்ளன.

# 4. மைனரும் கார்டியனும்

சட்டபூர்வமான பிரிவினைக்கோ விவாக விலக்குக்கோ நீதி மன்றத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்போதும், திருமணம் ரத்துச் செய்யப்படும்போதும் மைனர் குழந்தைகளின் பாதுகாப்பு பற்றிய விஷயங்களில் முடிவு செய்வதற்கு நீதி மன்றத்துக்கு 1955-ஆம் வருஷ 'ஹிந்துத் திருமணச் சட்ட'ப்படி அதிகாரம் உண்டு. மைனர் குழந்தைகள் சம்பந்தமான அடிப்படை நியதி 'கார்டியன்ஷிப் சட்ட'த்தில் அடங்கியிருக்கிறது. ஹிந்து மைனர்கள், கார்டியன்கள் சம்பந்தமாக உள்ள சட்ட நியதிகளை இந்த கார்டியன்ஷிப் சட்டம் திருத்தித் தொகுத்திருக்கிறது. 1890-ஆம் வருஷ 'கார்டியன்கள், வார்டுகள் சட்டத்' துக்கு உபரியாக இந்தச் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது; ஹிந்துக்கள் உட்பட எல்லா நபர்களுக்கும் 1890-ஆம் வருஷச் சட்டம் பொருந்தும்.

புதிய சட்டத்தின்படி, 18 வயதுக்கு உட்பட்ட ஒரு ஹிந்து மைனரின் கார்டியன்களாக இருக்கத் தகுதி பெற்றவர்கள் இருவகைப்படுவர்: இயற்கையான கார்டியன்கள், நீதிமன்றத்தினால் நியமிக்கப்படும் கார்டியன்கள் என்பவர்களே அவர்கள். மற்றும் மைனருடைய தந்தை அல்லது தாயின் உயில் சாஸனத்தின் மூலம் ஒரு கார்டியனை நியமிப்பதற்கும் வசதி செய்யப்பட்டிருக்

கிறது. ஒரு ஹிந்து மைனரின் இயற்கையான கார்டியன்கள் வருமாறு: (1) பையனுகவோ திருமணமாகாத பெண்ணுகவோ இருந்தால் முதலில் தந்தை கார்டியன், அவருக்குப்பின் தாயார். ஆனுல் 5 வயது பூர்த்தியாகாத மைனருக்குச் சாதாரணமாகத் தாயாரே கார்டியனுவார். (2) சோர புத்திரனுக்கு அல்லது திருமணமாகாத சோர புத்திரிக்குத் தாயார் முதல் கார்டியன், அவளுக்குப் பின் தந்தை கார்டியன். (3) திருமணமான பெண்ணுக்கு கார்டியன் கணவர். 'தந்தை' 'தாயார்' என்ற சொற்களில் மாற்றுந்தந்தையும் மாற்றுந் தாயும் அடக்கமில்லை. சுவீகாரத்தின்போது மைனராக இருக்கும் சுவீகாரப் பிள்ளைக்கு, சுவீகாரத் தந்தை முதலாவது கார்டியன், அவருக்குப்பின் சுவீகாரத் தாய் கார்டியன்.

ஒரு கார்டியனுக்கு அத்தியாவசியமான இரண்டு யோக்கியதாம்சங்கள் வருமாறு; (1) அவர் ஒரு ஹிந்துவாக இருக்க வேண்டும்; (2) அவர் உலகத்தை முற்றுந் துறந்த சந்நியாசியாக இருக்கக் கூடாது. இயற்கையான கார்டியன்கள் இல்லாத நிலைமையில், சந்தர்ப்பத்தைப் பொறுத்து, தகுந்த நபர் ஒருவரை கார்டியனுக நியமிக்க நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

மைனரின் நலனுக்காகவும் மைனரின் சொத்தைப் பாதுகாப்பதற்காகவும், அவசியமான நடவடிக்கைகள் எடுப்பதற்கு இயற்கையான கார்டியனுக்கு அதிகாரம் உண்டு. ஆனுல் அவர் தம்முடைய சொந்த ஒப்பந்தத்

தின் மூலம் மைனரைப் பந்தனப்படுத்துவதற்கு அதிகாரம் இல்லை. நீதி மன்றத்தின் முன்னனுமதியைப் பெறாமல் அவர், (1) மைனருடைய ஸ்தாவர சொத்தின் எந்தப் பகுதியையும் அடைமானம் வைக்கவோ அல்லது விற்பனை, நன்கொடை, பரிவர்த்தனை என்ற வழிகளில் மாற்றவோ, வேறு விதங்களில் காலி செய்யவோ முடியாது; (2) ஐந்து வருஷங்களுக்கு மேற்பட்ட காலத்துக்கோ அல்லது மைனர் மேஜராகக் கூடிய நாளிலிருந்து ஒரு வருஷத்துக்கு மேற்பட்ட காலத்துக்கோ எந்தச் சொத்தையும் குத்தகைக்கு விடமுடியாது.

இரண்டு விஷயங்களில் தவிர, மற்றப்படி மைனர், கார்டியன் சம்பந்தமாக ஏற்கனவே உள்ள சட்டத்தில் முக்கியமான மாறுதல் எதையும் புதிய சட்டம் ஏற்படுத்தவில்லை. அந்த இரு மாறுதல்கள் வருமாறு: (1) தந்தைக்கு அடுத்தபடியாக, சில சந்தர்ப்பங்களில் தந்தையைவிட முன்னுரிமையுடன், ஒரு ஹிந்து மைனரின் இயற்கையான கார்டியனாக இருப்பதற்குத் தாயாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது; (2) மைனரின் உயிரையோ சொத்தையோ, அல்லது இரண்டையுமோ பாதுகாப்பதற்காக ஒரு கார்டியனை நியமித்து உயில் எழுதி வைக்க ஒரு ஹிந்துத் தந்தைக்கு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது.

# 5. சுவீகாரமும் பராமரிப்பும்

சுவீகாரம் எடுத்துக் கொள்ளுவது என்பது புராதன ஹிந்துச் சட்டமுறையின் ஒரு அலாதி அம்சம். ஹிந்து ஒருவரின் ஆன்மா கடைத்தேறுவதற்கு ஒரு புத்திரன் இருப்பது அவசியம் என்று கருதப்பட்டதால் சுவீகாரம் எடுத்துக்கொள்ளுவதை மதம் அங்கீகரித்தது. புத்தி சுவாதீனமும் உள்ளவரும் வயது வந்தவருமான ஹிந்து ஆண் ஒருவர் ஒரு பிள்ளையைச் சுவீகாரம் எடுத்துக் கொள்வதற்குச் சட்ட ரீதியாக அதிகாரம் பெற்றிருந்தார். இவ்வாறு சுவீகாரம் எடுத்துக் கொள்ளும் போது அவருக்கு இயற்கையான முறையிலோ, வேறு சுவீகாரத்தின் மூலமோ பிள்ளை, பேரன் அல்லது கொள்ளுப் பேரன் இருக்கக்கூடாது என்ற நிபந்தனை மாத்திரம் விதிக்கப்பட்டிருந்தது.

மனு, வசிஷ்டர் ஆகியோரின் இரண்டு வாசகங்களை ஆதாரமாகக் கொண்டு சுவீகாரம் பற்றிய சட்டமுறை வகுக்கப்பட்டிருந்தது. நீதி மன்றங்கள் கடைப்பிடித்த ஹிந்துச் சட்டப்படி சுவீகாரத்திற்கு பின் கண்ட நிபந்தனைகள் இருந்தன; (1) ஆண்பிள்ளையைத் தான் சுவீகாரம் எடுத்துக் கொள்ளலாம்; (2) அவ்வாறு சுவீகாரம் எடுக்கும்போது சுவீகாரத் தந்தைக்கு இயற்கையாகப் பிறந்த மகனோ, பேரனோ இருக்கக் கூடாது: (3) தத்துப் புத்திரனை அவனுடைய தந்தையோ தாயோ தன்னிச்சையாக அல்லது நன்கொடையாகக் கொடுக்கவேண்டும்; (4) விதவை மனைவிதான் தன்னுடைய கணவனுக்காக, சம்மதம் பெற்றோ பெறா

மலோ, சுவீகாரம் எடுத்துக் கொள்ளலாம்; (5) கணவனுடைய ஆயுள் காலத்தில் அவனுடைய சம்மதத்தைப் பெருமல் மனைவி சுவீகாரம் எடுத்துக் கொள்ள முடியாது. (6) கணவனுக்காகவே எந்தச் சுவீகாரமும் எடுத்துக் கொள்ள வேண்டும்; ஒரு ஸ்திரி தனக்காக எடுத்துக் கொள்ளும் சுவீகாரம் செல்லாது என்பதுடன் அந்த சுவீகார புத்திரனுக்குச் சட்டபூர்வமான உரிமை எதுவும் கிடையாது; (7) மனைவி சம்மதிக்காவிடினும் கணவன் சுவீகாரம் எடுத்துக் கொள்ளலாம்; (8) தன்னுடைய சுவீகாரப் பெற்றோர்களுக்கு மறுமையில் ஆத்ம சாந்தியை சுவீகாரப் புத்திரன் வழங்குவதாகக் கருதப்பட்டதாலும், வம்சம் முடிந்து போகாமல் இருக்க அவன் உதவுவதாலும், சுவீகாரம் எடுத்துக் கொள்வது என்பது ஒரு மதச் சடங்காக மதிக்கப்பட்டது. அதனல், தக்க ஹோமம் முதலிய சடங்குகள் செய்தால்தான் சுவீகாரம் செல்லுபடியாகும் என்று கருதப்பட்டது.

கணவன் சார்பில் ஹிந்து விதவை ஒருத்தி சுவீகாரம் எடுக்கலாம் என்ற உரிமை சம்பந்தமாக மிதாக்ஷரச் சட்ட முறையின் உட்பிரிவுகளை ஆதாரமாகக் கொண்ட குறிப்பிட்ட வாசகங்களைப் பொறுத்து, ஹைகோர்ட்டுகள் வெவ்வேறு விதமான வியாக்கியானங்களைத் தெரிவித்தன. இது சம்பந்தமான நடைமுறைகள் இடத்துக்கு இடம் எந்த அளவுக்கு வேறுபட்டிருந்தன என்பதைக் கீழே காணலாம்:—

(1) மிதிலை சம்பிரதாயப்படி ஒரு விதவை சுவீகாரம் எடுத்துக் கொள்ளவே முடியாது.

(2) வங்காளம் (தாயபாகம்), வாரணுசி, சென்னைச் சம்பிரதாயங்களின்படி ஒரு விதவை தன்

தன் கணவன் அளித்திருக்கக்கூடிய அதிகாரத்தின்பேரில் சுவீகாரம் எடுத்துக் கொள்ளலாம்.

(3) சென்னைச் சம்பிரதாயப்படி, பாகப் பிரிவினை செய்து கொள்ளாத கணவனின் கூட்டுப் பங்காளிகள் அல்லது ஸபிண்ட உறவினர்களின் சம்மதத்தின் பேரில் ஒரு விதவை சுவீகாரம் எடுத்துக் கொள்ளலாம் என்றும் கருதப் பட்டது.

(4) பம்பாய்ச் சம்பிரதாயப்படி (மாயூக) சுவீகாரம் எடுத்துக்கொள்ளக் கூடாது என்று கணவன் தெளிவாகத் தடை விதித்திரா விட்டால், வேறு எவருடைய அங்கீகாரமும் இல்லாமல், விதவை சுவீகாரம் எடுத்துக் கொள்ளலாம்.

(5) சில சந்தர்ப்பங்களில், சம்பிரதாயம் அனுமதித்தால், யாருடைய அங்கீகாரமும் இல்லாமல் விதவை சுவீகாரம் எடுத்துக் கொள்ளலாம்.

இவ்வாறு, ஒவ்வொரு பிராந்தியத்திலும் புழக்கத்தில் இருந்த நியதிகளைப் பொறுத்து புரண்பட்ட வியாக்கியானங்களை ஹைகோர்ட்டுகள் வெளியிட்டதால் சுவீகாரம் பற்றிய சட்டம் அதிகச் சிக்கல் நிறைந்ததாகவும் தெளிவற்றதாகவும் ஆகிவிட்டது. இதேபோல் சுவீகாரத்தை ஆட்சேபிக்கப் பங்காளிகளுக்கு இருந்த உரிமை, சொத்தை மாற்றுவதற்கு விதவைக்கு இருந்த அதிகாரங்கள் ஆகியவை சம்பந்தமாகவும் ஹிந்துச் சட்டத்தில் உள்ள வாசகங்களுக்கு வேறுபட்ட வியாக்கியானங்கள் தெரிவிக்கப்பட்டன. இதன் காரணமாக, நாடு முழுவதற்கும் ஒரே அடிப்படையில், சுவீகாரம்

பற்றிய சட்டத்தைத் தொகுக்க வேண்டும் என்று ஹிந்துச் சட்டக் கமிட்டி வலியுறுத்தியது.

## புதிய சுவீகாரச் சட்டம்

'ஹிந்துச் சட்டத் தொகுப்பின்' நான்காவது, கடைசி, அங்கமாக 'ஹிந்து சுவீகாரங்கள் பராமரிப்புச் சட்ட'த்தை 1956-ல் பார்லிமெண்ட் நிறைவேற்றியது. இந்தச் சட்டம் 1956, டிஸம்பர் 21-ந் தேதி அமுலுக்கு வந்தது. ஹிந்துக்களின் சுவீகாரங்கள், பராமரிப்பு சம்பந்தமான முந்திய சட்டங்களைத் திருத்தியும் தொகுத்தும் அது இயற்றப்பட்டது. ஹிந்து சுவீகாரச் சட்டம் சம்பந்தமான எந்த ஒரு வாசகம், விதி அல்லது வியாக்கியானமும், மற்றும் சட்டத்தைப் போன்ற ஆணை பெற்ற எந்த ஒரு சம்பிரதாயமும், வழக்கமும், இந்தப் புதிய சட்டத்தை மீறுவதாகவோ, இதற்கு முரண்பட்டதாகவோ இருந்தால் அது செல்லாது, புதிய சட்டமே செல்லுபடியாகும். சுவீகாரம் சம்பந்தமாக இறுதியான சட்டமும் இதுவே. இந்தப் புதிய சட்டத்தின் பிரகாரமே வருங்காலச் சுவீகாரங்கள் நடக்க முடியும்.

பழைய சட்ட அமைப்பில் பின்கண்ட முக்கியமான மாறுதல்களைப் புதிய சட்டம் புகுத்தியிருக்கிறது:

(1) சுவீகாரம் எடுத்துக் கொள்வதற்கு ஆண்களைப் போலவே பெண்களுக்கும் அதிகாரம் உண்டு; பெண்களைச் சுவீகாரம் எடுத்துக் கொள்வதும் செல்லுபடியாகும்.

(2) எல்லாச் சுவீகாரங்களும் இந்தச் சட்டத்தின் பிரகாரமே இருக்க வேண்டும்.

(3) சுவீகாரம் சம்பந்தப்பட்ட மத ரீதியான முக்கியத்துவம் நீக்கப்பட்டு விட்டது. தத்த

ஹோமமோ வேறு மதச் சடங்குகளோ செய் தால்தான் சுவீகாரம் செல்லுபடியாகும் என் பதில்லை.

## செல்லத்தக்க சுவீகாரங்கள்

புதிய சட்டத்தின்படி, பின்கண்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தால்தான் சுவீகாரங்கள் செல்லுபடியாகும் : (1) சுவீகாரம் எடுத்துக்கொள்பவருக்கு அதற்கான தகுதி யும் உரிமையும் இருக்கவேண்டும். (2) சுவீகாரம் கொடுப்ப வருக்கு அதற்கான தகுதி இருக்கவேண்டும். (3) சுவீகாரம் எடுத்துக் காள்ளப்படும் நபருக்கு அதற்கான தகுதிஇருக்க வேண்டும. ஆனால், மனைவி உயிரோடு இருக்கும்வரை அவ ளுடைய சம்மதம்இல்லாமல் கணவன் எவரையும்சுவீகாரம் எடுத்துக் கொள்ளக் கூடாது என்று தெளிவாகக் குறிப் பிடப்பட்டிருக்கிறது. ஒரு ஹிந்து விதவை ஒரு புத்திர னையோ, புதல்வியையோ சுவீகாரம் எடுத்துக் கொள்ள லாம். குழந்தையின் தந்தை, தாய், கார்டியன் முதலி யோர் குழந்தையைச் சுவீகாரம் கொடுப்பதற்குத் தகுதி வாய்ந்தவர்கள். தந்தை காலமாகியிருந்தால் குழந்தை யைத் தாயார் சுவீகாரம் கொடுக்கலாம். குழந்தையின் இயற்கையான கார்டியன் எவரும் உயிரோடு இல்லா விடினும், குழந்தைகள் அனாதைகளாக இருந்தாலும், அல்லது பெற்றோர்களால் கைவிடப்பட்ட குழந்தை யாக இருந்தாலும், நீதி மன்றத்தின் முன்னனுமதியைப் பெற்ற பிறகே சுவீகாரத்திற்கு கார்டியன் கொடுக்க வேண்டும். இதற்காக கார்டியன்கள் இரு வகைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனர் : (1) குழந்தையின் தந்தை அல்லது தாயின் உயில் சாஸனத்தின் மூலம் நியமிக்கப் பட்ட கார்டியன், (2) நீதி மன்றத்தின் மூலம் நியமிக்கப் பட்ட அல்லது கார்டியனைப் பிரகடனம் செய்யப்பட்ட கார்டியன்.

சுவீகாரம் எடுத்துக் கொள்ளப்படும் நபர் பின் கண்ட நான்கு நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவேண்டும்:—

(1) அவனோ அவளோ ஹிந்துவாக இருக்க வேண்டும்.

(2) அவனோ அவளோ ஏற்கனவே சுவீகாரம் செய்து கொள்ளப்பட்ட நபராக இருக்கக் கூடாது.

(3) அவனுக்கோ அவளுக்கோ திருமணமாகி யிருக்கக் கூடாது.

(4) அவனுக்கோ அவளுக்கோ 15 வயது பூர்த்தி யாகியிருக்கக் கூடாது.

கடைசி இரண்டு நிபந்தனைகள் சம்பந்தப்பட்ட வரை, இவற்றுக்கு மாறான சம்பிரதாயம் அல்லது வழக்கம் இருந்தால் அச்சம்பிரதாயத்தின்படி செய்து கொள்ளப்படும் சுவீகாரமும் செல்லுபடியாகும்.

சுவீகாரம் எடுத்துக் கொள்ளும் குடும்பத்திற்கு இருக்க வேண்டிய தகுதிகள் வருமாறு :—

(1) ஹிந்து மதத்தைச் சேர்ந்த ஒரு புத்திரனோ, பேரனோ, கொள்ளுப்பேரனோ உயிரோடு இருக்கும்போது அந்தக் குடும்பத்தினர் வேறு ஒரு புத்திரனைச் சுவீகாரம் எடுத்துக்கொள்ளக் கூடாது.

(2) ஹிந்து மதத்தைச் சேர்ந்த ஒரு புத்திரியோ, பிள்ளை வழிப் பேத்தியோ உயிரோடு இருக்கும்போது அக்குடும்பத்தினர் வேறு ஒரு

புத்திரியைச் சுவீகாரம் எடுத்துக் கொள்ளக் கூடாது.

(3) ஒரு ஆண் ஒரு பெண்ணை சுவீகாரம் எடுத்துக் கொள்ளுவதென்றால் அந்தப் பெண்ணுக்கு அவர் குறைந்தபட்சம் 21 வயது மூத்தவராக இருக்க வேண்டும்.

(4) ஒரு ஆணை ஒரு பெண் சுவீகாரம் எடுத்துக் கொள்வதென்றால் அந்த ஆணுக்குக் குறைந்த பட்சம் 21 வயது மூத்தவளாகச் சுவீகாரத் தாயார் இருக்க வேண்டும்.

சுவீகாரத்தின் விளைவுகள்

ஒரு குழந்தை சுவீகாரம் எடுத்துக் கொள்ளப் பட்ட தினத்திலிருந்து எல்லா விதங்களிலும் சுவீகாரத் தந்தை அல்லது தாயின் குழந்தையாகவே கருதப்படும். தான் பிறந்த குடும்பத்துடன் அதற்குள்ள பந்தங்கள் அறுபட்டுப் போகும். ஆயினும், சொத்து எதையும் தாங்கள் ஜீவந்தர்களாக இருக்கும்போது பிறருக்கு மாற்றவோ அல்லது உயிலின் மூலம் மாற்றவோ சுவீ காரத் தந்தை அல்லது தாய்க்கு உள்ள உரிமையானது சுவீகாரம் காரணமாகப் பறிபோகாது. செல்லத்தக்க முறையில் சுவீகாரம் செய்து கொள்ளப்பட்ட பிறகு, சுவீ காரம் செய்து கொண்டவர்களோ அல்லது சுவீகாரம் எடுக்கப்பட்டவரோ அதை ரத்துச் செய்ய முடியாது. இதன் காரணமாகவே, அவசர புத்தியுடன் சுவீகாரம் எடுத்துக் கொள்வதைத் தடுப்பதற்காக, சுவீகாரம் எடுத் துக் கொள்ளப்படுவோரின் வயது வரம்பை நிர்ணயிப் பது போன்ற உத்தரவாதங்கள் செய்யப்பட்டுள்ளன. சுவீகாரம் செய்து கொள்வதற்காகப் பணமோ வேறு வெகுமதியோ கொடுப்பதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்

கிறது. இந்தத் தடையை மீறுவோருக்கு 6 மாத சிறை வாசமோ அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப் படும். இது சம்பந்தமாக வழக்குத் தொடருமுன் ராஜ்ய சர்க்காருடைய அல்லது ராஜ்ய சர்க்காரின் அத் தாட்சி பெற்ற ஒரு அதிகாரியினுடைய முன்னனுமதி பெறப்படவேண்டும்.

## ஹிந்துச் சட்டமும் பராமரிப்பும்

ஹிந்து ஒருவருக்குச் சொத்து இருந்தாலும் இல்லா விட்டாலும், தம்முடைய மனைவியையும், மைனர் பிள்ளை களையும், திருமணமாகாத பெண்களையும், வயோதிகப் பெற்றோர்களையும் சம்ரட்சணை செய்வது சட்டபூர்வமாக அவருடைய பொறுப்பு ஆகும். 'நூறு அக்கிரமங்கள் செய்தாவது, வயோதிகப் பெற்றோர்களையும், நற்குண மனைவியையும், சிறு குழந்தைகளையும் பராமரிக்க வேண் டும்' என்று மனு கூறியிருக்கிறார்.

மிதாக்ஷரச் சட்டத்தின் பிரகாரம், ஹிந்து அவி பக்த குடும்பம் ஒன்றில் உள்ள ஆண் உறுப்பினர்கள் எல்லோருடைய மனைவிகளையும், மக்களையும், இறந்து போன கூட்டுப் பங்காளியின் மனைவி மக்களையும் பரா மரிப்பது அக்குடும்ப நிர்வாகியின் சட்ட பூர்வமான பொறுப்பு ஆகும். திருமணமாகாத சகோதரி, மாற்றாந் தாய், மாமியார், விதவையாகிவிட்ட மாட்டுப் பெண் ஆகியோருக்குக் காலஞ்சென்ற ஒருவருடைய எஸ்டேட் டில் தார்மீக ரீதியான அல்லது சட்ட ரீதியான பாத்தி யதை இருப்பதால், அவர்களை யெல்லாம் அந்த எஸ் டேட்டின் வாரிசு பராமரித்தாக வேண்டும்.

குடும்பத்தைப் பராமரிக்கின்ற கணவனுடன் வாழ் வது ஹிந்துச் சட்டப்படி மனைவியின் கடமையாகும்.

கணவனுடைய சொந்தச் சொத்திலிருந்தும், அவன் இறக்கும்போது பொதுச் சொத்தில் அவனுக்கு இருந்த பங்கிலிருந்தும் பராமரிப்புப் பொறுப்பு பெறுவதற்கு விதவைக்கு உரிமை உண்டு. இதேபோல, விதவையாகி விட்ட மாட்டுப்பெண்ணும் தன் கணவனின் தந்தையிடமிருந்தோ, மற்ற உறவினர்களிடமிருந்தோ பராமரிப்புப் பெறுவதற்குச் சட்டபூர்வமான உரிமை உண்டு. ஒரு அவிபக்த குடும்பத்தில் உள்ள பெற்றோர்கள், திருமணமாகாத சகோதரிகள், மைனர்கள் ஆகியோரும் பராமரிப்புப் பெறமுடியும். பராமரிப்பு உரிமையானது எஸ்டேட்டைச் சார்ந்த பொறுப்பு அல்ல; ஆனால் ஒரு டிகிரி அல்லது ஒப்பந்தம் அல்லது உயில் மூலம் அதை எஸ்டேட்டின் பொறுப்பாகச் சுமத்தலாம். சட்டபூர்வமாகப் பிறக்காத குழந்தைகளும், சாசுவதமாகப் பிரத்தியேக ஆசைநாயகியாக இருந்த ஸ்திரியும் (அவருத்த ஸ்திரீ) முறையே, காலஞ்சென்ற தந்தை அல்லது கணவனின் சொத்திலிருந்து பராமரிப்புப் பெறுவதற்கு, ஹிந்துச் சட்டப்படி, உரிமை உடையவர்கள்.

நீதிமன்ற டிகிரி மூலம் ஒரு மனைவி பராமரிப்பு உரிமையைப் பெற்றிருந்தாலும், அவள் தன்னுடைய கற்பை இழந்துவிட்டால் அந்த உரிமையையும் இழந்து விடுவாள். ஒரு கணவன் ஹிந்து மதத்தைக் கைவிடுவதன்மூலம் தன்னுடைய மனைவியின் பராமரிப்பு உரிமையை மறுக்க முடியாது. பராமரிப்புப் பெறுவதுடன் கணவனுடன் தான் வசித்துவந்த குடும்ப வீட்டில் தொடர்ந்து வசிப்பதற்கும் ஒரு விதவைக்கு உரிமை உண்டு.

## புதிய பராமரிப்புச் சட்டம்

1956-ஆம் வருஷ 'ஹிந்து சுவீகாரங்கள், பராமரிப்புச் சட்ட'த்தின் மூலம் ஹிந்துக்கள் சம்பந்தமான சட்ட நியதிகள் எல்லாம் அதிகத் தெளிவுடனும் நுட்பத்துடனும் ஒன்றுசேர்க்கப்பட்டுள்ளன. ஒரு ஆணோ பெண்ணோ வேறு மதத்திற்கு மாறுவதன் மூலம் ஹிந்து மதத்தைக் கைவிட்ட பின்னரும் கூடப் பராமரிப்புப் பெற அந்த நபருக்கு உரிமை உண்டு என்று இச் சட்டம் கூறுகிறது; பழைய சட்டங்களுக்கும் இதற்கும் இடையேயுள்ள முக்கியமான வித்தியாசம் இது. பராமரிப்புப் பெற ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமை உண்டு என்று இச்சட்டம் கூறுவது மற்றொரு முக்கியமான மாறுதலாகும். புதிய சட்டத்தின் பிரகாரம் கணவன் தன் மனைவியிடமிருந்தும், மைனராக உள்ள ஒரு புத்திரன் அல்லது புத்திரி தன் தாயாரிடமிருந்தும் பராமரிப்புக் கோர முடியும். பராமரிப்புக்காக ஒரு ஸ்திரி மனுச் செய்துகொள்ளும்பொழுது அவளுடைய பெயரிலுள்ள சொத்துக்களை மாத்திரமின்றி, தன்னுடைய திறன் அல்லது கல்வியினால் அவள் பெறுகின்ற வருமானத்தையும் நீதிமன்றம் கருத்தில் கொண்டு பராமரிப்புத் தொகையை நிர்ணயிக்க வேண்டும்.

## முக்கிய அம்சங்கள்

ஹிந்துச் சட்ட நியதியின்படி பராமரிப்புப் பெறும் தகுதியுடையவர்களை ஐந்து வகையினர்களாக 1956-ஆம் வருஷச் சட்டம் பிரித்திருக்கிறது. (1) மனைவி, (2) விதவையாகிவிட்ட மாட்டுப் பெண், (3) மைனர் குழந்தைகள். (சட்டபூர்வமானவர்களும் சட்ட பூர்வமல்லாதவர்களும்) 4) வயோதிகப் பெற்றோர்கள், (5) சார்ந்திருக்

கும் மற்றவர்கள். ஒவ்வொரு வகையினர் சம்பந்தமான விதிகளும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஹிந்து மனைவி ஒருத்தி (1) கற்புடன் இருக்கும் வரையும், (2) ஹிந்து மதத்திலிருந்து வெறு மதத்திற்கு மாருத வரையும், அவளைத் தன்னுடைய ஆயுள்பரியந்தம் கணவன் பராமரிக்க வேண்டும் என்று சட்டம் கூறுகிறது. ஹிந்து மனைவி தன்னுடைய கணவனிடமிருந்து தனித்து வாழ்ந்தபோதிலும் பின்கண்ட நிலைமைகளில் அவள் தன்னுடைய பராமரிப்பு உரிமையை இழப்பதில்லை.

(1) அவளைக் கணவன் அகாரணமாகக் கைவிட்டிருந்தால், அல்லது வேண்டுமென்றே புறக்கணித்துவிட்டால் ;

(2) தன்னுடைய கணவனுடன் வசிப்பது தனக்குத் தீங்கையோ அல்லது ஹானியையோ விளைவிக்கும் என்று அவள் நியாயமாகப் பயப்படும் அளவிற்கு அவளை அவன் கொடுமைப் படுத்தியிருந்தால் ;

(3) அவன் கடுமையான குஷ்ட ரோகத்தினுல் பீடிக்கப்பட்டிருந்தால் ;

(4) அவனுக்கு இன்னெரு மனைவி உயிரோடிருந்தால் ;

(5) தன்னுடைய மனைவி வசிக்கும் அதே வீட்டில் அவன் ஒரு ஆசைநாயகியை வைத்திருந்தால், அல்லது வேறு எங்காவது ஒரு ஆசைநாயகியுடன் வழக்கமாக வசித்து வந்தால் ;

(6) அவன் வேறு மதத்திற்கு மாறியிருந்தால் ;

(7) அவள் தனியாக வாழ்வதற்கு வேறு ஏதா வது காரணம் இருந்தால்.

தன்னுடைய கணவனின் மரணத்துக்கும் பிறகு மாமனரிடமிருந்து பராமரிப்புப் பெறுவதற்கு ஒரு ஹிந்து விதவைக்கு உரிமை உண்டு. இந்த உரிமைக்கு இரண்டு நிபந்தனைகள் உள்ளன; (1) அவள் தன்னுடைய சுய சம்பாத்தியத்தின் மூலமோ வேறு சொத்தின் மூலமோ தன்னைப் பராமரித்துக் கொள்ள இயலாதிருக்க வேண்டும்; (2) அவளுக்குச் சொந்தச் சொத்து இல்லாதிருக்க வேண்டும்; மற்றும், தன்னுடைய கணவன் அல்லது தந்தை அல்லது தாயாரின் எஸ்டேட்டிலிருந்தோ, மகனிடமிருந்தோ அல்லது மகனின் வருமானம் அல்லது எஸ்டேட்டிலிருந்தோ பராமரிப்புப் பெற இயலாதிருக்க வேண்டும். பங்காளிச் சொத்து இல்லாவிடிலோ, அல்லது மனுதார் மறுமணம் செய்து கொண்டாலோ, இவ்வாறு மாமனரிடமிருந்து பராமரிப்புக் கோர முடியாது.

தன்னுடைய ஆயுள்காலம் முழுவதிலும் தன்னுடைய சட்டபூர்வமான குழந்தைகளையும் சட்டபூர்வமல்லாத குழந்தைகளையும் பராமரிப்பது ஒரு ஹிந்து ஆண் அல்லது பெண்ணின் கடமை என்று புதிய சட்டம் கூறுகிறது. சட்டபூர்வமான அல்லது சட்டபூர்வமல்லாத ஒரு குழந்தை மைனராக இருக்கும் காலம்வரை, பெண்ணுக இருந்தால் திருமணமாகும்வரை, தன்னுடைய தந்தை அல்லது தாயிடமிருந்து பராமரிப்புக் கோரமுடியும். இதேபோல் தங்களுடைய சம்பாத்தியத்திலிருந்தோ வேறு சொத்திலிருந்தோ தங்களை பராமரித்துக் கொள்ள முடியாதிருக்கும் வயோதிக அல்லது பலவீனப் பெற்றோர்களைப் பராமரிப்பது அவர்களுடைய மக்களின் கடமையாகும்.

## பராமரிப்புக்கு உரிய உறவினர்கள்

இந்தச் சட்டத்தின் பிரகாரம், காலஞ்சென்ற ஒருவருடைய உறவினர்களுள் பராமரிப்புக்கு உரிய உறவினர்களின் ஜாபிதா வருவாறு ;

(1) தந்தை ;

(2) தாய் ;

(3) விதவை மனைவி (அவள் மறுமணம் செய்து கொள்ளாதவரை) ;

(4) மைனர் மகன் ;

(5) அகால மரணமடைந்த மகனின் மைனர் மகன் (பேரன்) ;

(6) அகால மரணமடைந்த மகனுடைய அகால மரணமடைந்த புத்திரனின் மைனர் மகன் (கொள்ளுப்பேரன்) ;

(7) திருமணமாகாத மகள் ;

(8) அகால மரணமடைந்த மகனின் திருமணமாகாத மகள் (பேத்தி) ;

(9) அகால மரணமடைந்த மகனுடைய அகால மரணமடைந்த புத்திரனின் திருமணமாகாத மகள் (கொள்ளுப் பேத்தி).

(10) விதவையாகிவிட்ட மகள் ;

(11) அகால மரணமடைந்த மகனின் விதவை மனைவி ; (அவள் மறுமணம் செய்து கொள்ளாதிருக்கும் வரை.)

(12) அகால மரணமடைந்த மகனுடைய புத்திரனின் மனைவி (அவள் திருமணம் செய்து கொள்ளாதிருக்கும் வரை).

(13) சட்டபூர்வமல்லாத மைனர் மகள்;

(14) சட்டபூர்வமல்லாத மகள் (அவளுக்குத் திருமணமாகாத வரை).

இவ்வாறு தம்மைச் சார்ந்து இருப்பவர்களின் சம்ரட்சணைக்காகக் காலஞ்சென்ற ஹிந்து ஏற்கனவே சாஸன பூர்வமாக வேறு ஏற்பாடு செய்திருக்கவில்லை என்றால் அவருடைய எஸ்டேட்டிலிருந்து பராமரிப்புப் பெறுவதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு. எஸ்டேட்டின் வாரிசுகள் தங்கள் பங்கு எஸ்டேட்டுக்கோ அல்லது பங்கின் மதிப்புக்கோ ஏற்ற விகிதத்தில் மேற்சொன்னவர்களின் பராமரிப்புக்குப் பொறுப்பு ஏற்க வேண்டும். சம்பந்தப்பட்ட கட்சியாரின் அந்தஸ்து, உரிமை கோருபவர்களின் நியாயமான தேவைகள், சொத்தின் மதிப்பும் வருமானமும், சம்பாத்தியத்தின் அளவு, பராமரிக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கை ஆகியவை பற்றிய பொதுப்படையான சில கொள்கைகளை ஆதாரமாகக் கொண்டு பராமரிப்புத் தொகையை நீதி மன்றம் தன்னுடைய யுக்தானுசாரப்படி நிர்ணயிக்கலாம். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சார்புள்ளவருக்கு உரிய பராமரிப்புத் தொகையை நிர்ணயிக்கும்போது நீதி மன்றம் கவனிக்க வேண்டிய சில வழிகாட்டிக் கொள்கைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

டிக்ரி மூலமாகவோ, ஒப்பந்தத்தின் மூலமாகவோ நிர்ணயிக்கப்படும் பராமரிப்புத் தொகையை மாற்றுவதை அவசியமாக்குகின்ற சூழ்நிலை ஏற்பட்டால் அவ்வாறே மாற்ற முடியும். பராமரிப்புப் பாத்தியதையை எஸ்டேட்டின் பொறுப்பாக்கி சொத்திலிருந்து அதைப் பெறுவதற்கும் ஏற்பாடு செய்ய முடியும்.

# 6. சீர்திருத்தத்தின் சாரம்

'ஹிந்துச் சட்டத் தொகுப்பு' என்று பொதுவாக அழைக்கப்படும் நான்கு சட்டங்களின் வாயிலாக ஹிந்துச் சட்ட அமைப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள மிக முக்கியமான மாறுதல்களை முந்திய அத்தியாயங்களில் பார்த்தோம். பழைய ஹிந்துச் சட்ட நியதி புதிய உருவில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. அதாவது, துரித கதியில் சென்று கொண்டிருக்கும் நவீன உலக வாழ்வுக்கு ஏற்ற விதத்தில் அது செம்மையாக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டங்களின் விளைவாகப் பல குறைபாடுகள் நீக்கப்பட்டு நவீன சமுதாயத்திற்கும் சிந்தனை முறைக்கும் ஏற்ற விதத்தில் சட்டம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. புராதனச் சட்டத்தின் பிரகாரம் பெண்களைவிட ஆண்களுக்கு அதிகமான உரிமைகள் இருந்து வந்தன; ஆனால் இப்போது பல உரிமைகள் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமாக்கப்பட்டுள்ளன. பழைய விதியின்படி, உயில் இல்லாத சொத்தின் வாரிசு உரிமையை தூரத்து ஜாதிக்காரர்களுக்குக் கொடுப்பதற்குப் பதில் இயற்கையான அன்புக்கும் அபிமானத்திற்கும் உரியவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற கோட்பாடு இப்போது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதேபோல் திருமண உரிமைகள் சம்பந்தமாகவும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம அந்தஸ்து அளிக்கப்பட்டிருக்கிறது. சில வரையறைகளுக்கு உட்பட்டுத் திருமண விலக்குப் பெறும் வசதியும் ஹிந்துக்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

பெரும் தீமையாக வளர்ந்திருக்கும் வரதட்சிணை முறையை ஒழிப்பதற்காக இயற்றப்பட்டுள்ள மற்றொரு சட்டம் பற்றியும் இங்கு குறிப்பிடுவது அவசியம். இந்த வரதட்சிணை ஒழிப்புச் சட்டம் 1961 மே 20-ந்தேதி அமுலுக்கு வந்தது. ஹிந்துக்கள் உட்பட எல்லா வகுப்பினர்களுக்கும் பொருந்தும் விதத்தில் சட்டத்தின் நோக்கமும் வாசகங்களும் அமைந்துள்ளன. பெண்கள் அல்லது பையன்களின் திருமணத்திற்காக வரதட்சிணை வாங்குவதையும் கொடுப்பதையும் இச்சட்டம் தடுக்கிறது. திருமணம் செய்து கொள்வதற்காக என்று, திருமணத்திற்கு முந்தியோ பிந்தியோ, திருமணத்தில் சம்பந்தப்பட்ட ஒரு தரப்பாரோ அல்லது வேறு நபரோ, எந்தச் சொத்தையும் அல்லது மதிப்பு வாய்ந்த எதிர் ஜாமீனையும், நேரடியாக அல்லது மறைமுகமாகக் கொடுப்பதோ அல்லது கொடுக்கச் சம்மதிப்பதோ 'வரதட்சிணை' (டௌரி) என்று இச்சட்டத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. திருமணத்தின்போது ரொக்கம், நகைகள், உடைகள் அல்லது வேறு பண்டங்களாகக் கொடுக்கப்படும் 'வெகுமதிகள்' வரதட்சிணையின் வரம்புக்குள் வருவதில்லை.

நாட்டின் புத்துணர்ச்சிக்குச் சின்னமாக விளங்குகிறது ஹிந்துச் சட்டச் சீர்திருத்தம். ஹிந்துச் சட்டங்களை முறையாகத் தொகுத்திருப்பதன் விளைவாக முன்பு காணப்பட்ட குழப்பமும் சந்தேகங்களும் கணிசமாக நீங்கிவிட்டன. ஹிந்துச் சட்ட அமைப்பு இப்போது எளிமையாகவும், தெளிவாகவும், குழப்பத்திற்கு இடமின்றியும் இருக்கிறது.